NEW SCIENCE ACADEMY
Kannathiddy Jaffn a
ஆரம்பமாகி விட்டது
PAPER CLASS
பிரிவு II
PHYSICS
By சோதிலிங்கம்
SAT) SUN) 2 - 30 P. M.

பக்கங்கள் எட்டு — விலை ரூபா:- 3-00

# முரசொலி

முரசு 04 ஒலி 95 வெள்ளி 11-05-1990 (சித்திரை 28) ஷவ்வால் 15

NEW SCIENCE ACADEMY
Infront of BMC Jaffna
ஆரம்பமாகி விட்டது
PAPER CLASS
பிரிவு III
CHEMISTRY
By: செல்வரஞ்சன்
SAT) SUN) 11 - 30 A. M.

# வடபகுதி தமிழ் இளைஞர்கள் கொழும்பில் கைது;விசாரணை

## தக்க காரணமின்றி கொழும்பில் நடமாடும் தமிழ் இளைஞர் பொலிஸ் விசாரணையில்

(கொழும்பு)

கடந்த இரு தினங்களாக வெள்ளவத்தை, பம்பலப்பிட்டிப் பகுதிகளிலுள்ள விடுதிகள் ஆள்நடமாட்டம் அதிகமாகவுள்ள வீடுகள் என்பன பொலிஸாரின் திடீர் முற்றுகைக்கு உள்ளாகின.

மட்டக்களப்பு மாவட்ட எம். பி சாம் தம்பிமுத்துவின் கொலையுடன் சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்யும் முகமாக பொலிஸார் தேடுதல் வேட்டைகளை நேற்று முன் தினம் முடுக்கிவிட்டுள்ளனர்.


இதன் தொடர்பாகவே மேற்படி முற்றுகையும் இடம் பெற்றது.

இதன் விளைவாகத் தமிழ் இளைஞர்கள் பலர் பொலிஸாரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்திற்குக் கூட்டிச் செல்லப்பட்டனர்.

நேற்று மாலைவரை இவர்கள் அங்கு தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டனர்.

தக்ககாரணமின்றி கொழும்பில் நடமாடும் இளைஞர்கள் கொழும்புக்குத் தங்கள் வருகைக்கான தக்க காரணங்களைக் கூற முடியாதவர்கள் புதிதிதாக நடமாடுவோர் என கொழும்பில் விடுதிகளிலும் பல்வேறு இடங்களிலும் தங்கியுள்ள இளைஞர்களே தற்போது விசாரணை செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு பிரதி பொலிஸ் ... 8 ம் பக்கம் பார்க்க



களத்தில் சாவது கூட எமக்கு சந்தோஷம்
உள்ளே... 5-ம் பக்கம்

## நாடு திரும்பும் பிரான்ஸ் தாதிக்கு பருத்தித்துறையில் பாராட்டு

பருத்தித்துறை அரசினர் ஆதார (மந்திகை) வைத்திய சாலையில். சேவையாற்றி பிரான்சிற்குத் திரும்பிச் செல்லவுள்ள பிரான்ஸ் வைத்திய சேவைக் குழு இணைப்பதிகாரி செல்வி ஜக்குலின் (மருத்துவத் தாதி) சேவையைப் பாராட்டி பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை அபிவிருத்திச் சபை சேவை நலன் பாராட்டு விழாவொன்றை நடாத்த

←- 8 ஆம் பக்கம் பார்க்க

## இன்று பாடசாலைகள் அரைநேரம்

இன்று சகல யாழ்மாவட்ட பாடசாலைகளும் அரைநேரத்துடன் மூடப்படும். தமிழர் ஆசிரியசங்க முன்னாள் தலைவர் திரு டி.எஸ்.கே வணசிங்க படுகொலை செய்யப்பட்ட தினத்தை முன்னிட்டே பாடசாலைகள் ஒரு மணியுடன் மூடப்படுகிறது.

இன்று மாலை இரண்டு மணிக்கு யாழ் இந்து மகளிர் கல்லூரியில் அஞ்சலிக் கூட்டம் ஒன்றும் நடைபெறும்.

### தாய்ப்பாலில் உள்ள மகிமை

## எயிட்ஸ் நோயுள்ள தாய் பயமின்றிப் பாலூட்டலாம்

எயிட்ஸ் நோயின் தொற்றுக்கு ஆளாகியிருக்கும் தா ஈ தனது குழந்தைக்கு முலைப் பாலூட்டும்போது அக் குழந்தைக்கு எயிட்ஸ் பரவாமல் தடுக்கக் கூடிய இரசாயனம் ஒன்று மனித முலைப்பாலில் இருப்பதை கண்டு பிடித்துள்ளதாக அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

8 ஆம் பக்கம் பார்க்க

## வி. புலிகள் மக்கள் முன்னணி சிற்றூர் இணக்க மன்றுகள்

அந்நியரின் காலடிகள் எமது தாயகத்தை விட்டகன்ற பின்னர் மக்கள் தம் அன்றாட பிரச்சினைகளை தீர்த்து வைக்கும்படி எம்மை வேண்டுகின்றனர். இந்நிலையில் மக்கள் தம் பிணக்குகளை தமது ஊர் பெரியவர்களுடன் கலந்துரையாடி சமாதான வழியில் தீர்த்து வைக்குமுகமாக இணக்க மன்றுகள் எமது நேரடி கண்காணிப்பில்இயங்கி சிறப்பாக நடைபெறும் வகையில் புதிய அமைப் ר வகைகள் உருவாக்கி தமிழீழ இணக்க மன்று என்ற நூலை வெளியிட்டுள்ளோம். இதிலுள்ள இணக்க விதிகளுக்கு இணங்க ஒவ்வோர் சிற்றூர் இணக்கமன்றும் அமைக்கப்பட்டு நிர்வகிக்கப்படும்.

இவ்வாறு இணக்க மன்று விதிகள் தொடர்பாக விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி விடுத்துள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விணக்கசபைகள் சிறப்பாக இயங்க மக்களின் ஒத்துழைப்பு அவசியம் ஏனெனில் இவற்றை அமைப்பதுடன் மட்டுமல்ல ஆலோசனைகளையும் வழங்குவது மக்களின் கடமையாகும்.

எனவே பொது மக்கள் இணக்க மன்றுகள் தொடர்பான தமது ஆலோசனைகளை தெளிவாக எழுதி இணக்க மன்றப் பொறுப்பாளர் விடுதலைப்புலிகள் மக்

— 8 ஆம் பக்கம் பார்க்க

### தொலைபேசி அவுட்

நேற்று யாழ்நகரின் கோட்டைப்பகுதியில் தொலைபேசி வயர்கள் களவாடப் பட்டுள்ளன, இதனால் நகரின் தொலைபேசிச்சேவைகள் ஸ்தம்பிதமடைந்தன,

"பருவமடைந்த 16 வயதுப் பெண் திருமணம் செய்ய சட்டத்தில் அனுமதி உண்டு"

விபரங்களுக்கு

வாரமுரசொலி

## க. பொ. த. சாதாரண பரீட்சைக்கு தோற்றமுன் சகல மாணவர்களுக்கும் தொழில்நுட்பப் பயிற்சி

சகல பாடசாலைகளிலும் ஆண்டு ஒன்பதாம் வகுப்பில் தொழில்நுட்பக் கல்விமற்றும் வாழ்க்கை சார்ந்த கல்வியை மாணவருக்கு போதிக்க கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது.

க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் ஒரு மாணவன் தோற்றுவதற்கு முன்னதாகவே அவருக்கு இத்தகைய கல்வியில் நல்ல தேர்ச்சியடைய செய்வதற்கு திட்டங்கள் வகுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

க. பொ. த. சாதாரண பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களில் எண்பது சதவீதத்தினர் உயர்கல்வியை தொடர முடிவதில்லை, இத்தகையவர்களுக்கு தொழில் வாய்ப்பை பெற்றுக் கொடுப்பதே இக்கல்வித்திட்டத்தின் முக்கிய நோக்கம் என கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

இத்தகைய தொழில் நுட்ப கல்வியை மாணவருக்குப் போதிக்க பெற்றோர்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என கல்வி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

# மயிலங்கூடல் ஞானவைரவர் சங்காபிஷேக நிகழ்வில் இலக்கண வித்தகர் நமசிவாய தேசிகர் பண்பு பாராட்டும் சிறப்புமலர்

## பேருலகு வியக்கின்ற சொல்லின் செல்வன்

உலகமெலாம் புகழ்தமிழை உயர்த்த வென்றே
ஓயாது ஒழியாது கண்துஞ் சாது
பலபணிகள் செய்கின்ற நமசி வாயப்
பண்டிதரின் நற்பணிக்கு நிகர்தான் யாதோ?

தான்கற்ற கல்வியினைத் தன்னோ டேயே
வைக்காது தக்கோர்க்குத் தந்து நல்ல
மாணவரை உருவாக்கி மகிழ்ச்சி காண்போன்
வானனெக் கொடை செய்யும் வண்மையாளன்

கற்றறிந்து கற்றபடி வாழ்ந்து நல்ல
கல்வியினா லாயபயன் காண வைத்தான்
பெற்றபெருங் கல்வியினாற் பணிவுங் கொண்டோன்
பேருலகே வியக்கின்ற சொல்லின் செல்வன்

உயிராகத் தமிழதனைக் கொண்ட மேலோய்!
உனைப்போலத் தமிழ்வளர நாமும் இங்கு
நயமான பலபணிகள் நாளுஞ் செய்வோம்
ஞாலத்தில் தமிழ்நிலையை உயர்த்தி வைப்போம்

**பார்வதிநாதசிவம் மகாலிங்கசிவம்**


உலகினர் உயர்வு உளத்தினில் நிகழ மயலினைப் போக்கும் மயிலங்கூடல் ஞானவைரவர் சங்காபிஷேகம் இனிது நிறைவுற இலக்கணவித்தகர் நமசிவாய தேசிகர் நற்றமிழ்த் தேனெனநம்மிடை வாழவேண்டும்

நமசிவாய தேசிகர் நீடூழிவாழ. வாழ்த்தும்
**காந்தி கல்வி நிலையம்**
பிரதான வீதி, இளவாலை.

ஆண்டு 9,10,11,A/L கலை,வர்த்தகம் வகுப்புகளுக்கு
முன்னணி கல்வி நிலையம்
**தான்சன் கல்வி நிலையம்**
கே.கே.எஸ்.வீதி,தெல்லிப்பழை.

கிருமிநாசினி,உரவகைகள்,பீற்றூட்,பம்பாய்
வெங்காய விதை விற்பனையாளர்
**கமக்காரர் மாளிகை**
கே.கே.எஸ்.வீதி,சுன்னாகம்

உரம்,கிருமிநாசினி விற்பனையாளர், கதிரை,பந்தல்
வாடகைக்கு கொடுக்கப்படும்
**அபிராமி கமக்களஞ்சியம்**
நகுலேஸ்வர வீதி,மயிலங்கூடல்

நமசிவாய தேசிகர் வண்டமிழெனச்சிறக்க
ஞாழியூர்தியை வேண்டுவம்
**முருகன் கமக்களஞ்சியம்**
அம்பனை.

நமச்சிவாய தேசிகர் நல்வாழ்வுக்கு வேண்டுவோம்
**ஸ்ரீ துர்க்கா கிறைண்டிங் மில்**
நகுலேஸ்வரன் வீதி, கருகம்பனை

நமச்சிவாய தேசிகர் இன்றமிழ்ப் பயனை
என்றும் நுகர்வோம்
**அம்பாள் கிறேசர்**
அளவெட்டி வடக்கு, அளவெட்டி.

தேசிகர் பல்லாண்டுபயன் தருவாராக
**ஆனைவிழுந்தான் விக்னேஸ்வரன் கிறேசர்**
மெய்கண்டான் வீதி, இளவாலை.

தேசிகர் நலம் பாராட்டுவோம்
**அப்புத்துரை அன் சன்ஸ்**
பண்டத்தரிப்பு வீதி சிறுவிளான்.

தேசிகர் வாழ்வு வளம் சிறக்கப் பிரார்த்திப்போம்
**மெய்கண்டான் மகா வித்தியாலய**
பழைய மாணவர் சங்கம், இளவாலை.


## ஆலய வரலாறு

'விடையவர் தாம் சித்தமகிழ் வயிராய்த் திருமலை நின்றணைகின்றார்' என்பது பெரிய புராண மெனும் திருத்தொண்டர் புராணச் செய்தி. எங்கும் நிறைந்து எல்லாமாய் வியாபித்து எல்லையற்று நிற்கும் பரம்பொருள் ஆன்மாக்களுக்கு அருள் பாலிக்கும் பொருட்டுப் பெறுகின்ற மூர்த்தி பேதங்கள் பல. மேற்காட்டிய பாடற்பகுதி மூலம் வைரவப் பெருமானின் கோலக்காட்சி பற்றிப் பேசும் வேளை சேக்கிழார் சுவாமிகள் உண்மையைத் தெளிய வைக்கிறார்கள்.

"யாதொரு தெய்வங் கொண்டீர் அத்
தெய்வமாகியாங்கே மாதொரு பாகனார்
தாம் வருவர்"

என்பது சிவஞான சித்தியார். 'எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் பரம்பொருளே சிவலிங்கம் முதலான திருமேனிகளின் இடமாக நின்று அருள்புரிகின்றார்.' என்னும் நாவலர் பெருமான் வாக்கிற்கமைவாக அருண்மிகு ஞானவைரவப் பெருமான் தொல்பதி மயிலங்கூடற்கண் எழுந்தருளியிருந்து ஆன்மாக்களுக்கு அருள் புரிகின்றார்', தெல்லிப்பழை தென் மேற்கில் நகுலேஸ் வரத்துக்குத் தென்பால் ஒரு கல் தொலைவிலுள்ளது தான் மயிலங்கூடல் என்னும் அழகுமிகு சிறிய கிராமம். இக்கிராமத்தினர் போற்றும் பழைமையை கிராமம் உணர்த்துவதை இன்றும் அவதானிக்க முடியும். அந்நியர் ஆட்சிக்காலத்தில் சைவ வழிபாட்டிற்குத் தடை நேர்ந்தவேளை எம்மக்களின் வழிபாடு வைரவ வழிபாடாக மலர்ந்திருக்க வேண்டும் அந்த வகை மலர்ச்சி தான் காலப்போக்கில்வயிரவர் ஆலயமாயிற்று. இந்த ஆலயத்தின் தொடக்க காலத்தை யாராலும் கண்டுகொள்ளமுடியவில்லை. பத்தொன்பதாம்நூற்றாண்டின்இறுதி காலத்தில் வாழ்ந்த சைவப் பெரியார் வேலுப்பிள்ளை என்பவரின் பராமரிப்பிலும், தொடர்ந்தும் 1923 ஆம் ஆண்டு வரை அவர் மகன் மயில்வாகனம் என்பவர் முகாமையிலும், பின்னர் அவர் மகன் தியாகராசா என்றழைக்கப்பட்ட வேலுப்பிள்ளையின் முகாமையிலும் கோயில் சிறப்பாக நிர்வகிக்கப்பட்டு வந்தது. திரு. தியாகராசா அவர்கள் 1971-ல் மறைய அவருக்கு ஆண்மகவு இல்லாத காரணத்தால் மூத்த மகள் செல்வலட்சுமியின் பெயரால் அவர் கணவர் திரு. கந்தையா அவர்கள் பரிபாலனத்தைக் கவனித்து வந்தார்கள். மக்கள் உள்ளத்தே தோன்றிய மாற்றங்கள் காரணமாக 1985. 10. 05 ஆந் தேதி வழிபடுவோர் மத்தியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட திருப்பணிச் சபையினர் ஆலய நிர்வாகத்தைப் பொறுப்பேற்றனர். இச்சபையில திரு. த. கந்தையா அவர்கள் உபதலைவராகப் பணிச் புரிந்துள்ளார். 1986. 09. 21-ல் நடைபெற்ற வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் திருப்பணிச் சபை ஆலயபரிபாலன சபையாக மாற்றம் பெற்று திருப்பணி வேலைகளையும் பரிபலானத்தையும் சிறப்புறச் செய்து வருகின்றது.

திரு. வேலுப்பிள்ளை மயில்வாகனம் காலத்தில் இவ்வாலயத்தின் முதவாவது கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளதாகத் தெரிகின்றது தமிழகத்திலிருந்து வந்துமாவிட்டபுரத்தில் வாழ்ந்த குருசிரோண்மணி சிவஸ்ரீ அரிகரக் குருக்கள் அவர்கள் அக்கும்பாபிஷேகக் கிரியைகளுக்குத் தலைமை தாங்கியுள்ளார்கள். ஆவணி ரோகிணியில் குப்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது. ஆண்டைக் குறிப்பிட முடியவில்லை. திரு. மயில்வாகம் அவர்களுக்கும் திரு. தியாகராசா அவர்களுக்கும் மிகமிக அநுசரணையாக உதவி முகாமையாளராக - எம்பெருமான் சந்நிதியை என்றும் புனிதமான அழகுபட வைத்திருப்பராக இருந்தவர் திரு. வே. வயிரவப்பிள்ளை அவர்கள். இசைஞானக்கல்வி பெறாத வயிரவப்பிள்ளை அவர்கள் சாஸ்திர அறிவுபடைத்தவர்களுக்கு எந்தவித குறைவுமின்றி ஈடுபாட்டோடு உளமுருகிஊஞ்சற்பாடல்களைப்பாடும் போது எல்லோரும்மெய் மறந்து கேட்டுக்கொண்டிருப்பர் என்று அறிகின்றோம். திரு. ம. தியாகராசா, திரு.வே. வயிரப்பிள்ளை என்போரது நிர்வாக காலத்திலும் ஒரு கும்பாபிஷேகம் நடந்துளது. ஆண்டு நினைவிற்கு வருவதாக இல்லை. கும்பாபிஷேகத்தைச் செய்த குருக்கள்யாரென்றும் அறிய முடியவில்லை. மூன்றாவது முறையாக 1984. 05. 04 வெள்ளி காலை நயினை பிரதிஷ்டா பூஷணம் சிவஸ்ரீ சுவாமிநாத பரமேஸ்வரக்குருக்கள் தலைமையிலமர்ந்த அந்தணப் பெருமக்களால் கும்பாபிஷேகம் நடாத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து சித்திரை மிருகசீரிட நட்சத்திரத்தை முதலாகக் கொண்டு பன்னிரண்டு தினங்கள் அலங்கார உற்சவம் நடைபெற்று வருகின்றது. சித்திரைப் பரணி, னவ காசிப் பொங்கல், ஆவணி ரோகிணி, ஆவணிச் சதுர்த்தி, நவராத்திரி, ஐப்பசிப்பரணி, திருவெம்பாவை, தைப்பொங்கல் என்னும் புண்ணிய காலங்களிலும் விசேட திருவிழா நடைபெறுகின்றது. நாயன்மார்கள் குருபூசை நடைபெறுவதும் குறிப்பிடத்தக்கது.

நித்திய பூசை காலையில் மட்டும் தொடர்ந்து நடைபெறுகின்றது. செவ்வாய்க் கிழமைகளில் கூட்டுப் பிரார்த்தனையுடன் கூடிய விசேட வழிபாடு மாலை வேளைகளிலும் இடம்பெறும்.

அலங்கார உற்சவம், நவராத்திரி. திருவெம்பாவை என்னும் விசேட வழிபாட்டுக் காலங்களில் மாலை கட்டுதல், சகலகலாவல்லி மாலை மனனம், அபிராமி அந்தாதி மனனம் என்பவற்றில் முன்னேறும் வண்ணம் பரிசில் வழங்கிச் சிறுவர்கள் ஊக்குவிக்கப்படுகின்றார்கள். குழந்தைச் செல்வங்களை பள்ளி மாணவர்களைப்பேச வைப்பதன் மூலம் அவர்களது பேச்சாற்றலும் வளர்க்கப்படுகின்றது.

கருவறையுடன் சேர்ந்த மூன்று மண்டபங்களைக் கொண்ட கோயிலமைப்புத்தான் ஆதியில் இருந்ததாக இப்போதுள்ளவர்களால் நினைவிற்குக் கொண்டுவர முடிகின்றது. இரண்டாவது கும்பாபிஷேக காலத்தில் நான்கு மண்டபங்களாக விரிவடைந்தது மூன்றாவது கும்பாபிஷேகத்திற்கு முன்பாகவே ஐந்தாவது மண்டபமும் கட்டப்பட்டு நிறைவாகியது. ஐந்தாவதான தம்ப மண்டபம் 1986 ஆம் ஆண்டு மீண்டும் கட்டப்பட்டுள்ளது. ஆகம முறைப்படி அமைந்த கர்ப்பக்கிருகம் சுண்ணக்கல் சீமேந்து என்பவற்றாலானது. வர்ண வேலைகளுடன் கூடிய தூபி அன்பர்களின் அகத்தைக் குளிர வைக்கின்றது. நந்தி பலிபீடம் என்பன அமைக்கப்பட வேண்டுமென அடியவர்கள் விரும்பியுள்ளனர். ஏழு பரப்பு வரை நிலத்தைக்கொண்ட இவ்வாலயத்திற்கு இரண்டு வீதிகள் உள. சிறிய அளவிலான மணிக்கோபுரத்தையுடைய இவ்வாலயத்தில் இராச கோபுரம் திருக்குளம் என்பன அமைக்கப்பட வேண்டுமென்னும் அவா அடியவர்க்குண்டு.

எங்கள் வழிபடு தெய்வம் அருண்மிகு வைரப்பெருமான் பலருக்கும் பல சந்தர்ப்பங்களில் உதவியமையை இப்போதும் நினைவு கூருகின்றோம். இரவு வேளைகளில் ஆலயத்தின் கிழக்கேயுள்ள வெளியில் வேறு யாருடைய உதவியுமின்றி வைரவக் கடவுளைத் தியானித்தபடி சென்ற இரண்டொருவருக்கு முன்னே சதங்கை ஒலியுடன் கூடிய ஒரு நாய் சென்று கொண்டிருந்ததைக் கண்டிருக்கின்றார்கள். கோயிற்திருப்பணிக்காக பணத்துடன் சென்றவேளை இப்படி நிகழ்ந்ததாக என் முன்னோர்களது கருத்தை யான் பெற்றதுண்டு.

இவ்வரலாற்றை இந்த அளவிலாவது தொகுப்பதற்கு உதவிய மூதறிஞர் திரு. ஆ. சுப்பிரமணியம், திரு. க குட்டித்தம்பி, எக தந்தை சி. சிறீரங்கம் ஆகியோருக்கு வைரவப் பெருமான் அருள் என்றென்றும் கிடைக்க வேண்டும். அமரராகிய என் அன்னை தந்த கருத்துக்களும், அவர் தம்பி திரு. ம, தியான் ராசா தந்த செய்திகளும் கூட இங்கு இடம் பெற்றுள்ளன.

தொகுப்பு: சி. அப்புத்துரை

## பிரதிஷ்ட கிரியாகலாமணி சிவஸ்ரீ வை. மு. பரமசாமிக்குருக்கள் ஆசியுரை

எடுக்குங் காரியமனைத்தும் இடையூ
றின்றிச் செவ்வனம் நிகழ அருள்
பாலிக்கும் ஆதி ஞானவைரவப் பெருமான்
சங்காபிஷேகம் சிறப்புற அமைய
மக்கள் உய்தி பெற ஆசிகள்.
இலக்கணவித்தகர் நீண்ட
காலம் வாழவேண்டும் உயர்
இலக்கணக் கருத்துக்களை
உலகிற்கு வழங்க வேண்டும்
அவர்களை எல்லோரும்
போற்றுவம்.

# இதயநாதம்

**வெள்ளிக்கிழமை 11-05-1990**

## நலவாக்கு

தத்துவ ஞானியல்ல நான். ஆத்மஞானி என்கிறீர்களா? இல்லை. ஆனால் நான் ஒரு ஏழை. ஏழைகளை நேசிக்கிறேன். இதுவே உண்மை.

-சுவாமி விவேகானந்தர்

ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்

## வரவர வடபகுதி பஞ்சிகாவத்தையாக

அபிவிருத்தியடைந்த நாடுகளில் கழித்து விடப்படும் வாகனங்களை மூன்றாம் மண்டல வளர்ந்து வரும் நாடுகள் கொள்முதல் செய்கின்றன.

இதேசமயம் அபிவிருத்தி அடைந்த நாடுகள் இலங்கை போன்ற வளரும் நாடுகளுக்கு நிதி உதவி, கடன் என்ற போர்வையிலும் வாகனங்களை அனுப்புகின்றன.

வெளிப்பார்வைக்குக் கடன் என்று கூறினாலும் உண்மையில் பெரிய நாடுகள் கடன் என்ற பெயரில் பணத்திற்குப் பதில் தமது உற்பத்திகளைத் தள்ளி விடுகின்றன.

கடன் என்ற பெயரில், அவர்களின் உற்பத்திக்கு வளரும் நாடுகள் சந்தையாக மாறி விடுகின்றன.

அத்தோடு உற்பத்திப் பொருட்களுக்குரிய பணத்திற்கு (கடன்) வட்டியையும் அவை அறவிட்டு விடுகின்றன.

இந்தவகையில் பழைய வாகனங்களையும் பல சமயங்களில் மீளமைப்புச் செய்து தள்ளி விடுகின்றன.

சில சமயங்களில் இலவசமாகக் கூட வாகனங்களை தந்துதவுகின்றன.

மீளமைப்புச் செய்த வாகனங்களாகையால் இலவசமாகத் தந்துதவிய வாகனங்களின் உதிரிப்பாகங்கள் விரைவில் பழுதாகி விடுகின்றன.

இவற்றுக்கு உதிரிப்பாகங்களை அந்த நாட்டிடமிருந்தே பெற்றுக் கொள்ள வேண்டும்.

எனவே அவை இலவசமாகத் தந்துதவிய வாகனங்களின் பெறுமதியை விட அதிக பெறுமதிக்கு உதிரிப்பாகங்கள் அதே நாட்டிடம் கொள்வனவு செய்ய வேண்டியுள்ளது.

அனுப்பி வைக்கப்பட்ட வாகனங்களே பெரிய நாடுகளில் கழித்து விடப்பட்ட வாகனங்களாகும்.

இப்படிப் பல வகையில் இலங்கை ஒரு கழிவு வாகனங்களின் குப்பை கொட்டும் இடமாக மாறி வருகிறது.

வளர்ந்து வரும் நாகரிக முன்னேற்றத்தால் கொழும்பில் வாகனங்கள் பல மேலும் கழிக்கப்படுகின்றன.

இவ்விதம் கழிபடும்வாகனங்கள் பெரும்பாலும் வடக்கு-கிழக்கிற்கே வந்துசேருகின்றன.

வடகிழக்கானது இலங்கையின் பஞ்சிகாவத்தையாக மாறிவிட்டது.

இன்று வடக்கில் ஓடும் வாகனங்களில் எழுபது வீதமானவை பாவனைக்கு உதவாதவையாகும்.

பெரும்பாலான வாகனங்களில் 'கோர்ணைத்' தவிர மற்றதெல்லாம் சத்தம் போடும்.

வீதியில் செல்லும் போது இந்திரலோகத்தை நினைப்பூட்டி புகையடித்துச் செல்லும் வாகனங்களே அதிகம்.

பல வாகனங்களின் உடற்பகுதி சீராகவில்லை. முன்பக்கம் ஒரு திசையிலும் பின்பக்கம் எதிர்த்திசையிலும் திரும்பிபபடி நிற்கும். வாகனம் எத்திசையில் செல்கிறது என்பது புரியாத புதிராக இருக்கும்.

அந்தரம் ஆபத்திற்கு உடனடியாக 'பிரேக்' பிடிக்க முடியாத வாகனங்களே அதிகம் பாவனையில் உள்ளன.

இவற்றாலேயே பெருமளவு விபத்துக்கள் ஏற்படுகின்றன.

பல பயணிகள்பஸ்கள் போக்குவரத்திற்கு உதவாததாகவுள்ளன.

இப்படியான சகல வாகனங்களும் உடனடியாக பாவனையிலிருந்து அகற்றப்பட வேண்டியது அவசியமாகும்.

இதற்கு சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாக கடும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

## இரு மாணவருக்கு ஊக்குவிப்புணம்

(காவலூர்)

வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் தேவஸ்தானம் 1989ம் ஆண்டு நடைபெற்ற ஐந்தாம் ஆண்டுப்புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவேலணையைச் சேர்ந்த செல்வன் கனகரெத்தினம் காண்டீபன், செல்வி-சுந்தரலிங்கம் அன்புக்கரசி ஆகிய இருவருக்கும் மாதாந்த ஊக்குவிப்புத் தொகையை வழங்கத் தீர்மானித்துள்ளது.

சித்திரை மாதத்திலிருந்து இப்பணம் வழங்குவதென சமீபத்தில் நடைபெற்ற பரிபாலன சபைக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது. (24)

## விபரம் சேகரிப்பு

தென்மராட்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள 65 கிராம சேவையாளர்கள் பிரிவுகளிலும் இயங்கும் பாலர் பாடசாலைகளினதும் விபரம் சேகரிக்கப்பட்டு வருகிறது.

திட்டமிடல் அமைச்சினால் கேட்கப்பட்ட இந்த விபரங்களைத் தொடர்ந்தே யாழ். அரசாங்க அதிபர் சகல உதவி அரசாங்க அதிபர்களுக்கும் பாலர் பாடசாலை விபரங்களைச் சேகரிக்கும்படி சுற்று நிருபம் மூலம் கேட்டுள்ளார். (15)

## தொழிலாளர் பாதிப்பு

ஐம்பது இலட்சத்திற்கும் அதிகமான தனியார்துறை ஊழியர்களின் ஊழியர் சேமலாப நிதியமும் ஊழியர் நம்பிக்கை நிதியமும்நூற்றுக்கு 35 வீதமே செலுத்தப்படுவதாகக் கூறப்படுகின்றது.

தொழில் அமைச்சின் சேவைகள் நகர்ப் புறங்களில் மட்டும் மட்டுப்படுத்தலுக்கு சில அதிகாரிகளின் அசமந்தப் போக்கு போன்றவையே காரணமாகும். இதனால் ஊழியர் நம்பிக்கை நிதியத்தில் அங்கத்துவம் பெற்றுள்ள பலலட்சம் தொழிலாளர்கள் இதனால் பெரிதும்பாதிக்கப்பட்டுள்ளவர்கள்.

இந்நிலைமையை மாற்றி அமைப்பதற்கு கிராமங்கள் தோறும் சிரேஷ்ட தொழில் அதிகாரிகளை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகச் சமூகநல அமைச்சர் பிரேமச்சந்திர தெரிவித்தார்

## தலைவராகத் தெரிவு

தென்மராட்சி மேற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவராகத் திரு. ப. செல்லத்துரை தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கைதடி மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் கலைவாணி வித்தியாசாலை அதிபராகக் கடமையாற்றுகிறார்.

கைதடி சரஸ்வதி சனசமூக நிலையப் போஷகராகவும், கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவராகவும் இருந்து வருகிறார். இவர் சிறந்த சமூக சேவையாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (17)

## விவசாய கண்காட்சி

(நாயன்மார்கட்டு)

கோப்பாய் விவசாயிகள் சங்கத்தின் விசேடகூட்டம் அண்மையில் நடைபெற்றது.

இம்மாத நடுப்பகுதியில்விவசாயிகளின் உற்பத்தித் திறன்களை வெளிக்கொணரும்வகையில் விவசாயக் கண்காட்சிப் போட்டி, விவசாயம் சம்பந்தமான பேச்சுப் போட்டி களை நிகழ்ச்சிகள் என்பன நடாத்த விருப்பதாக சங்கச் செயலாளர் திரு.சி.நவரத்தினம் அங்கு பேசுகையில் தெரிவித்தார். (33)

## உரும்பிராய்தேவாலய திருத்த வேலைகள்

(மூளாய்)

1987-ம் ஆண்டில் இடம் பெற்ற இந்திய ராணுவ நடவடிக்கைகளின்போது பலத்த சேதமுற்ற பரிசுத்த இமானுவல் தேவாலயம் வெளிநாடுகளில் வசிக்கும் அப்பகுதி மக்களின் உதவியினாலும், இத்தேவாலய வழிபடுவோரின் உதவியினாலும் திருத்தியமைக்கப்பட்டு வருகிறது.

இவ் வேலைகளுக்கு கொழும்பு அத்தியாத்தினத்தினால் ஒரு இலட்சம் ரூபா வழங்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. இவ் வேலைகளைக் கவனிக்க புனருத்தாரண குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. (ப-1)

## கண்டி வீதி பற்றைகள் அழிப்பு

ஆனையிறவிலிருந்து பளை வரையிலுள்ள கண்டி வீதியின் இரு மருங்கிலுமுள்ள பற்றை செடிகள் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் துப்பவுர செய்யப்பட்டு வருகின்றது.

தினமும் நூற்றுக்கணக்கானோர் இவ் வீதி அகலமாக்கும் பணியில் ஈடுபட்டு வருவதாக அறியப்படுகிறது. (ப.3)

## தீவுப்பகுதியில் முட்டை விலை அதிகரிப்பு

தீவுப் பகுதியில் கடும் வெப்பம் நிலவுவதால் கோழிகளுக்கு தொற்று நோய்கள் ஏற்பட்டு மரணமடைந்து வருகின்றன. கோழிப் பண்ணைகளில் உள்ள கோழிகள் கூட இறக்கின்றன. இதன் காரணமாக தீவுப்பகுதிகளில் என்றுமில்லாதவாறு முட்டையின் விலை அதிகரித்துள்ளது. (24)

## மருத்துவமனைக்கு நீர் இயந்திரம்

வேலணை கிராமிய மருத்துவமனைக்கு புதிய நீர் இறைக்கும் மோட்டர் ஒன்றை யாழ் சுகாதார சேவைத் திணைக்களம் வழங்கியுள்ளது. இந்த கிராமிய ஆஸ்பத்திரியின் உபயோகத்தில் இருந்து வந்த இரு மோட்டர்கள் வருடக்கணக்கில் பழுதடைந்து திருத்தம் செய்யப்படாமல் இருந்ததுவந்ததுபற்றியசெய்தி யொன்றை முரசொலி வெளியிட்டிருந்தது வாசகர்கள் அறிந்ததே. (24)

## மின்சார சீர்கேடு

தொண்டமானாறு, கெருடாவில் பகுதியில் பலதடவைகள் வேண்டுகோள் விடுத்தும், தொடர்ந்தும் சட்டவிரோதமாக மின்சாரம் எடுத்து பலர் பாவித்து வருகின்றார்கள். எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால், அடிக்கடி மின்சார விநியோகம் இப் பகுதியில் பாதிக்கப்படுகிறது.

சம்பந்தப்பட்டவர்கள் இவ் விடயத்தில் கவனம் செலுத்தி ஆவன செய்யவேண்டுமென இப்பகுதி மக்கள் அங்கலாய்க்கிறார்கள். (1—ப)

## இராச வீதி சேவையை ஆரம்பிக்க கோரிக்கை

நீண்ட காலமாக நாடத்தப்பட்டுப் பின்னர் நிறுத்தப்பட்ட இராச வீதியூடான (986இலக்க) யாழ் அச்சுவேலி பஸ் சேவையை மண்டும் ஆரம்பிக்க வேண்டும்மென முடமாவடிபாற்பண்ணை மாசுவன் நவக்கிரி வாழ் மக்கள் யாழ் டிப்போ அதிகாரிகளைக் கூட்டாக வேண்டுகோள்விடுத்துள்ளனர்.

சேதமடைந்திருந்த இவ்வீதி தற்போது திருத்தியமைக்கப்பட்டுள்ளது அடிக்கடி அச்சுவேலி தனியார் பஸ் போக்குவரத்துச் சங்கத்தினரும் மினி பஸ் சேவையை நாடத்துவதும் நிறுத்துவதுமாகவுள்ளனர் தற்போது இப்பகுதி வாழ் மக்கள் யாழ் செல்ல வேண்டும்மெனில் அதிக தூரம் நடந்து பருத்தித்துறை வீதியிலேயே பஸ் பெற வேண்டியுள்ளதுடன் பலவித சிரமங்களையும் அனுபவிக்க வேண்டியுள்ளதெனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.(20)

## சுன்னாகம் சிவன் உற்சவம்

சுன்னாகம் ஸ்ரீ கதிரமலைச் சிவன் தேவஸ்தான மஹோற்சவம் இம்மாதம் 15ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 23-ம் திகதி தேர்த் திருவிழாவும் 24-ம்திகதி தீர்த்தத் திருவிழாவும் 26-ம் திகதி பகல் சங்காபிஷேகமும் அன்னதானமும், மாலை திருக்கல்யாணமும்இடம் பெறும்.(ப.1)

# சிறிய செய்திகள்

## வர்த்தமானி தரும் தகவல்

20—ம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானிப் பத்திரிகை பகுதி 4 (அ) வில், பொது நிர்வாக, மாகாண சபைகள், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் பிரசுரிக்கப்பட்ட விளம் ரத்தில் வடக்கு,கிழக்கு மாகாணத்திலுள்ள இலங்கை நிருவாக சேவை வகுப்பு II, தரம் II க்கான பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கான விசேட போட்டிப் பரீட்சை அடுத்த மாதம்23இல்கொழும்பில் நடாத்தப்படவுள்ளதாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இப் போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் இம் மாதம் 18—ம் திகதிக்கு முன்னர் பரீட்சை ஆணையாளருக்குக் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (47)

## நல்லின ஆடு

மட்டக்களப்பு மாவட்டத்தில் கால் நடை வளர்ப்போர்களுக்கு விநியோகம் செய்வதற்காக 54 நல்லின ஆடுகள் கிரிமிட்டி பண்ணையில் இனப் பெருக்கத்திற்காக வளர்க்கப்படுகின்றன.

இந்த ஆடுகள் இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்டவை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பதவி உயர்வுடன் இடமாற்றம்

யாழ். விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திலும், கொழும்பு தலைமைக் காரியாலயத்திலும் உதவி விலை மதிப்பீட்டாளராகக் கடமையாற்றிய திரு. ப. சந்திரசேகரம் சிரேஷ்ட உதவி விலை மதிப்பீட்டாளராகப் பதவி உயர்வு பெற்று பதுளைக்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

## உப மின் நிலையம் அமைப்பு

(மூளாய்)

சுழிபுரம் காளுவன் சந்தியில் புதிதாக உபமின் நிலையமொன்று அமைக்கப்பட்டு இம்மாதம் முதல் இயங்கத் தொடங்கியுள்ளது இதனால் இப்பகுதி மக்கள் பெரிதும் பயனடையவுள்ளார்கள்.

இதற்கென ஒதுக்கிய பணத்தின் மிகுதியை நெல்லியான் கிராமத்திற்கான மின் விநியோக வேலைகளுக்குப்பயன்படுத்த சுழிபுரம் பிரதேசசபை விசேட ஆணையாளர் இணங்கியுள்ளார். (ப.1)

## முன்னறிவிப்பு

பாராளுமன்றத்தில் இடம் பெறும் நடவடிக்கைகளை தொலைக் காட்சியிலும் வானொலியிலும் ஒளி, ஒலி பரப்புவதற்கு வேண்டிய ஒழுங்குகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் எனக் கோரும் பிரேரணைக்கு சிறீ ல. சு. கட்சி முன்னறிவித்தல் கொடுத்துள்ளது.

## இன்று

பனை அபிவிருத்திச் சபையும், ஐ.நா. அபிவிருத்திச் சபையும் இணைந்து மேற்கொள்ளும் பனைவள ஆய்வு இன்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாண உதவி அரசாங்க பிரிவில் உள்ள இருபத்தியெட்டுக் கிராம சேவையாளர் பிரிவுகளிலும் ஆரம்பிக்கப்பட இருக்கிறது. (ப-5

### நெடுந்தீவு மேற்குப் பகுதி

## பாரிய குழாய் குடி நீர் விநியோகத் திட்டம

நெடுந்தீவு மேற்குப் பகுதிக்கு குழாய் மூலம் குடி நீர் விநியோகிக்கப் படுவதற்கான திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது.

இதற்காக காரப்பிட்டியில் ஒன்றரை இலட்சம் ரூபா செலவில் பாரிய கிணறு ஒன்று தோண்டப் பட இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மத்திய பகுதிகளில் உள்ள நன்னீர்க் கிணறுகளும் புனரமைக்கப்படவுள்ளன. நீர் விநியோகத் திட்டத்திற்கென வரவு செலவுத் திட்ட நிதியில் இருந்து யாழ்ப்பாணம் தீவுப் பகுதி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுமார் ஆறு இலட்சம் ரூபாவரை வழங்கியுள்ளனர்.

### புனர் வாழ்வு முகாமில் உள்ள

## வாலிபர்க்கு வெளிநாட்டு வேலை வாய்ப்பு முயற்சி

புனர் வாழ்வு முகாம்களில் தடுத்து வைக்கப் பட்டுள்ள இளைஞர்களுக்கு வெளி நாடுகளில் வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

தச்சுவேலை, மேசன், வெல்டிங், ஜுகிமெஷினி ஆகிய துறைகளில் தேர்ச்சி பெற்ற இளைஞர்கள், யுவதிகள் இதற்கெனத் தெரிவு செய்யப்படுவார்கள்.

அரச அனுமதி பெற்ற வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிலையங்களுடன் தொடர்வு கொண்டு இதற்கான ஏற்பாடுகள் செய்யப் படவுள்ளன.

இவர்களுக்கான கடவுச் சீட்டுக்களை இலவசமாக வழங்க அரசாங்கம் முன் வந்துள்ளது.

## சாவகச்சேரி சுகாதாரப்பிரிவில் சுகாதார அலுவலர் பதவி பல காலி

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் நான்கு பொது சுகாதார பரிசோதகர்பதவிகளும், பதின்மூன்று குடும்ப நல உத்தியோகத்தர் பதவிகளும் வெற்றிடமாக உள்ளதாக அறியப்படுகிறது.

வெற்றிடமாகவுள்ள பதின்மூன்று குடும்ப நல உத்தியோகத்தர் பிரிவுகளுக்கும் கிராமிய சுகாதார உதவியாளர்கள் நியமிக்கப் பட்டுள்ள போதிலும் நிரந்தர உத்தியோகத்தர் பதவிகள் நீண்ட காலமாக நிரப்பப்படாமல் இருப்பது குறித்து பொதுமக்கள் கவலை தெரிவித்தனர்.

பொது சுகாதார பரிசோதகர் ஒருவரே கடமையிலிருப்பது குறிப்பிடத்தக்கது.

பத்தாண்டு சேவையை முடித்துள்ள தரம்(II) குடும்ப நல உத்தியோகத்தர்களை தரம்(I)க்கு பதவி உயர்த்துவதற்கான போட்டிப்பரீட்சை மே இருபதாம் திகதி நடைபெறுமென சுகாதார அமைச்சு பணிப்பாளர் சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவித்துள்ளார். (ப.3)

## உலக இந்து ஆராய்ச்சிநிலைய பணிப்பாளர் பதவி வெற்றிடம்

இந்து சமய கலாசார அலுவல்கள் ராஜாங்கஅமைச்சினால் உலக இந்து ஆராய்ச்சி நிலையப் பணிப்பாளர் பதவிக்கு இலங்கைப் பிரஜைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

35 வயதிற்கும் 45 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் விண்ணப்பிக்கக் கூடிய இப்பதவி பற்றிய மேலதிக விபரங்கள் 14.5.90 வர்த்தமானியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முரசொலி அனுசரணையுடன்
வவுனியா-புதுக்குளம்
சித்திவிநாயகர் விளையாட்டுக்கழகம் நடாத்தும்
12-வது வருடாந்த
விளையாட்டுப் போட்டி

### 115 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டிக்குரிய விண்ணப்பம்

முழுப்பெயர்..........................................

விலாசம்..........................................

மாவட்டம்..........................................

அதிர்ஷ்ட இலக்கம்..........................................

போட்டியால் ஏற்படும் கஷ்ட நஷ்டங்களுக்குக் கழகம் பொறுப்பாளி அல்ல என்பதினை நான் ஏற்றுக் கொள்கின்றேன்.

திகதி　　　　விண்ணப்பதாரியின் ஒப்பம்

இந்தச் சைக்கிள் ஓட்டப் போட்டியில் பங்கு பற்ற விரும்புவோர் மேலே பிரசுரிக்கப்பட்டுள்ள விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து 17. 05. 90க்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக கழகச் செயலாளர், சித்தி விநாயகர் விளையாட்டுக்கழகம், புதுக்குளம், சாஸ்திரி கூழாங்குளம், வவுனியா என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

### வாக்காளர் இடாப்பிலிருந்து

# ஏராளமான மலையகத் தமிழர் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன

கம்பளைப்பகுதியில் வாக்காளர் இடாப்புகள் சிங்களத்தில் மாத்திரம் இருப்பதாகத் தமிழ்மக்கள் மத்தியில் அதிருப்தி தெரிவிக்கப்படுகின்றது.

தேர்தல் திணைக்களத்தினால் இப்பிரதேசத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள 1989-ம் வருட வாக்காளர் பட்டியல்கள் தனிச்சிங்களத்திலேயே உள்ளன.

இதனால் இப்பகுதித் தமிழ் மக்கள் தம் பெயர்கள் வாக்காளர் இடாப்பில் இடம் பெற்றுள்ளனவா என்பதை அறிந்து கொள்ள முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இப்பகுதியிலுள்ள தொழிற் சங்கங்களின் அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாக்காளர் இடாப்புகள் கூட தனிச்சிங்களத்திலேயே வழங்கப்பட்டன.

இது இவ்வாறு இருக்க, பல காலமாகத் தொடர்ந்து வாக்குரிமை பெற்றிருந்த தமிழர்களில் ஏராளமானோரது பெயர்கள் குறிப்பிட்ட வருடத்தின் வாக்காளர் இடாப்பிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

## தம்பிமுத்து கொலை குறித்து ரெலோ எம்.பி அனுதாபச் செய்தி

சாம் தம்பிமுத்துவின் மறைவையொட்டி ரெலோ இயக்க பாராளுமன்ற உறுப்பினர் திரு.கோ.கருணாகரம் அனுதாபச் செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

தனது அரசியற் கருத்துக்களுக்காக பல விதத்திலும் பழி வாங்கப்பட்டிருந்த திரு. சாம். தம்பிமுத்து எம். பியின் உயிரும் இப்போது பறிக்கப்பட்டிருப்பது, தமிழ்ப்பிரதேசத்தின் எதிர்கால அரசியலையிட்டு மிக ஆழமான கேள்விகளை எழுப்பிநிற்கிறது.

தன் இளமைப் பருவத்திலிருந்து தமிழரசுக் கட்சியிலும் பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியிலும் தீவிரமாக இயங்கியதிரு'சாம்' தீவிரவாத இளைஞர்களுக்காக நீதி மன்றத்தில் திறமையுடன் வாதாடியதையும் இச்சந்தர்ப்பத்தில் நாம் நினைவு கூறுகின்றோம்.

பழகுவதற்கு இனியவரான அவர் பாராளுமன்றத்தில் சகல கட்சியினரதும் நன்மதிப்பை குறுகிய காலத்தில் பெற்றிருந்தார். அமைதியும் ஒற்றுமையும் ஏற்பட வேண்டும் என அவர் விசுவாசமாக விருப்பம் கொண்டிருந்தார்.

அவர் சார்ந்திருந்த ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிக்கும் அவரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த வேதனையை தெரிவித்துக் கொள்வதோடு துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிருடன் போராடிக் கொண்டிருக்கும் அவரின் துணைவி திருமதி. கலா தம்பிமுத்து நலம் பெறவும் நாம் பிராத்திக்கிறோம். என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பொலிஸ்மீது சூடு

## பாழடைந்த வீட்டுக்குள் பயங்கர ஆயுதங்கள் மீட்பு

ரோந்துச் சேவையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மீது இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர்

எல்பிட்டியில் இச்சம்பவம் நிகழ்ந்தது.

இதையடுத்துப் பொலிஸார் இப்பகுதியில் சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்தினர்.

இத்தேடுதலின் போது பாழடைந்த வீடொன்றுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த பெருந்தொகையான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

கைத்துப்பாக்கிகள் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட துவக்குகள் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டுக்கள், தோட்டக்கள் இராணுவச் சீருடைகள், வாக்கி டோக்கி என்பன கைப்பற்றப்பட்டன.

எனினும் எவரும் கைது செய்யப்படவில்லை.

## நடுநிசியில் குண்டுவெடிப்பு கடைகள் பலத்த சேதம்

### வெள்ளவத்தையில் சம்பவம்

வெள்ளவத்தையில்நிகழ்ந்த குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றினால் கடைகள் சில பலத்த சேதத்திற்குள்ளாகின. எவரும் காயமடையவில்லை. இது 'டைம்பாம்' எனப் பொலிசார் கூறினர்.

வெள்ளவத்தை கொலிங்வூட் பிளேஸ் காலி வீதிச்சந்தியில் உள்ள புக்கி ஒன்றில் செவ்வாய்க்கிழமை நடுநிசியில் இக்குண்டு வெடித்தது.

இந்த புக்கியுடன் தளபாடக்கடை ஒன்று, பிடவைக் கடை ஒன்றும் மற்றும் மதுபானக்கடையின் ஒரு பகுதியும் பலத்த சேதமடைந்தன. தனியார் கார் ஒன்றும் சேதமடைந்தது.

இக்குண்டு எங்கிருந்து வந்தது, எவ்வாறு வெடித்தது என்பது பற்றி பொலிசார் புலனாய்வு செய்து வருகின்றனர்.

இதுவரை எதுவித தகவலும் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

## திருமலையில் ஜனசக்தி உதவித் திட்ட ஏற்பாடு ஜரூர்

திருகோணமலையை சுற்றி பட்டணம் சூழல் பகுதியிலுள்ள 12,460 ஜனசக்திக் குடும்பங்களில் 7761 குடும்பங்கள் இதுவரை உதவி பெற்று விட்டன. ஏனைய குடும்பங்களுக்கும் விரைவில் உதவிகள் வழங்கப்படும்.

பட்டணமும், சூழலிலும் உள்ள உதவி பெறும் குடும்பங்களில் 7761 குடும்பங்கள் தங்கள் உதவிகளில் மூன்று கட்டங்களையும் பெற்று விட்டார்கள்.

ஏனையோருக்கு ஏப்பிரல் இறுதிப்பகுதியில் முதற்கட்ட உதவி வழங்கப்படும்

ஜனசக்தித் திட்ட உதவி பெறுவோரின் முயற்சியினால் அன்புவழிபுரம், செல்வநாயகம் புரம் உப்புவெளி ஆகிய கிராமங்களில் பல வீதிகள் புனரமைக்கப்பட்டிருக்கின்றன.

## சிறுகைத்தொழில் முயற்சிக்கு 75லட்சம் ரூபா ஒதுக்கீடு

யாழ் மாவட்ட சிறு தொழில் முயற்சிக்கான 20 பேர் கொண்ட ஒன்றிணைப்பு திட்டத்திற்கு 75லட்ச ரூபா விரைவில் இங்கு வந்து சேரவுள்ளது.

இந்த திட்டத்தின் கீழ் 20 பேர் கொண்ட குழு ஒரு லட்சம் ரூபாவில் சிறு முயற்சியை ஆரம்பிப்பதாகும். இத்திட்டத்தை சிறப்பாக நடைமுறைப் படுத்துவதற்காக யாழ் மாவட்டத்தில் 20 அரச சார்பற்ற நிறுவனங்கள் தெரிவு தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் இதுவரை 8லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. 75 லட்சம் வந்து சேர்ந்ததும் உடனடியாக அரச சார்பற்ற நிறுவனங்களின் ஊடாக இது வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டது:

## நிகழ்ச்சி ரத்து

இன்று வெள்ளிக்கிழமை நெடுந்தீவு பிரதேச சபையில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த மூக்குக் கண்ணாடி வழங்கும் வைபவம் காலநிலை சீராக இல்லாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாக நெடுந்தீவு பிரதேசசபை விசேட ஆணையாளர் அறிவித்துள்ளார்.

## பயிலுநர் ஆசிரியர் சங்கம்

வடமராட்சி கல்விக் கோட்டப் பிரிவு பயிலுநர் ஆசிரியர்களுக்கான பயிலுநர்ஆசிரியர் சங்கமொன்று அங்குரார்பணம் செய்து வைக்கப் பட்டுள்ளது.

இதன் தலைவராக திரு.கே. தர்மலிங்கமும், செயலாளராக திரு. கே. ஸ்ரீசந்திரனும், பொருளாளராக செல்வி ரீ. வசந்தமலரும் தெரிவாகினர். (15)

## விண்ணப்பம் விநியோகம்

(கொக்குவில்)

இலங்கைத் திறந்த பல்கலைக் கழகத்தின் யாழ் பிராந்திய நிலையத்தில்நேற்று 10ம் திகதி முதல் முகாமைத்துவம், சிறு வணிக முகாமைத்துவக் கற்கை நெறிக்கு விண்ணப்பப்படிவங்கள் விநியோகிக்கப் படவுள்ளன.

விண்ணப்ப முடிவு திகதி ஜுன் மாதம் ஐந்தாம் திகதி ஆகும். கற்க விரும்புபவர்கள் யாழ் பிரதேச நிலையத்துடன் தொடர்பு கொள்ளும்படிகேட்கப் படுகின்றனர்.

இக் கற்கைநெறி ஒரு வருட காலத்தைக் கொண்டது. இது தமிழ், ஆங்கில மொழி மூலம் நடாத்தப்படும். (ப-7)

## ஆரம்பமே தாமதம்

காங்கேசன்துறையில் இருந்து கொழும்பு கோட்டையை நோக்கிப்புறப்படும் சகல புகையிரதங்களும் கடந்த பல நாட்களாக தாமதமாகவே புறப்பட்டுச் செல்வதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

புகையிரத எஞ்ஜின் பற்றாக்குறையே இதற்கு முக்கிய காரணம் எனச்சொல்லப்படுகின்றது.

# “றெயினிங்...சந்தோஷம்...களத்தில் சாவதுகூட எமக்குச் சந்தோஷம்தான்”

## சுதந்திரப் பறவைகள் பெண் போராளிகளுடன் ஓர் சந்திப்பு - 2

- தர்ஷினி

### நேற்றைய தொடர்ச்சி

பூவென்றும், பொன்னென்றும் போற்றிய புளுகும் கவிஞர்களே போய் விடுங்கள்...பூகம்பங்களையும் உள்ளங் கையால் பொத்தும் வலிமை பெற்றவர்கள் இன்று எம்முன் நிற்பவர்கள்! பெண் அடிமை விலங்குகளை மேடையில் மட்டும் ஏறி முழக்கங்களால் மட்டும் உடைப்பவர்கள். மத்தியில் துப்பாக்கி முனைகளாலே...பெண் அடிமை விலங்குகளின் பூட்டுக்களை போட்டுடைக்கும் இவர்கள் திருப்பு முனைகள் !

இவர்கள் பயந்துகொண்டு போராட வந்தவர்கள் அல்ல புயலெனப் புறப்பட்டவர்கள் இவர்களில் பலர் பெற்றோர்களின் ஆசீர்வாதங்களுடன் தான் விடுதலைப் புலிகளின் பாசறைக்குள் போனவர்கள் ... இன அடக்குமுறையும், சமுகத் தாக்கமும்-இவர்களிடையே மனப் பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளன-அதனால் தமிழினத்தின் விடிவுக்காய் தலைநிமிர்ந்து போனவர்கள்-இன்று விடிவிளக்கை நெஞ்சில் ஏந்தி நிற்பவர்கள் .....

‘‘எங்கள் பயிற்சி மிகவும் சுவாசியமானது. எமக்கு ஆயுதப்பயிற்சியுடன், அரசியல் அறிவும் அளிக்கப்படுகின்றது. அத்தோடும் தொழில்நுட்பம், ஆயுதங்கள் பற்றிய சகல நுட்பமான அறிவும் அவற்றைப் பாதுகாக்கவும் பராமரிக்கவும் கற்றுத்தரப்படுகின்றது. அது மட்டுமல்ல ஆயுதத் தயாரிப்பு, வெடிகுண்டுகள் தயாரிப்பு பற்றி எமக்கு சகல விதமான கல்வியும் அளிக்கப்படுகின்றது. இவற்றைக் கற்கும்போது யார் நன்றாகச் செய்வது என்ற போட்டியிருக்குமே தவிர பொறாமை இருக்காது .....”

கண்ணிவெடிகள் செய்வதும், புதுவகையில் அவற்றைக் கண்டுபிடிப்பதும் இந்தப் பெண்களுக்குக் கைவந்த கலை. மூத்த போராளிகளின் கட்டுப் பாட்டுக்குள் கட்டுப்படுவது இவர்களின் கடமை எனிலும் சில நேரம் - அவர்களை ஏமாற்றுவது இவர்களின் செல்லமான விளையாட்டு ....

‘‘எப்போது பயிற்சியை முடிப்போம் ... எம்மை எந்தக் குரூப்பில் விடுவார்கள்........ அப்போது போர் முனைக்குப் போவோம் அதுதான் எங்கள் காட்டு வாழ்வின் கனவுகள்... ‘ரெயினிங்’குக்குப் போகமுன் படபடப்பாகத்தான் இருக்கும். ஆனால் போனபின்...எல்லாமே எல்லாமே உற்சாகம் தான்...”

இன்று சர்வதேச அமைப்பில் தமக்கென்று ஓர் தனியான இடத்தைப் பிடித்திருக்கும் இந்தப் பெண் போராளிகளை இதுவரை காலம் தெரிந்து கொள்ளாமல், புரிந்து கொள்ளாமல் குறுகுறுப்புடன் இருந்தவர்கள் எல்லோரும் இப்போதுதான் தங்கள் முணுமுணுப்புக்களை விட்டு முண்டியடித்துக் கொண்டு இவர்களைப் பற்றித் தெரிந்து கொள்ள வருகின்றனர்.

‘‘காட்டில் எம் எதிரிகள் எம்மைக் கண்டு கொள்ளாதபடி மிகவும் கவனமாக இருப்போம். சில வேளை எம் எதிரிகள் எம்மைக் கடந்து போவார்கள் நாம் வைத்த கண்ணிவெடிகளுக்கும், குண்டுகளுக்கும் அருகே அவர்கள் வந்து நிற்பார்கள் ஆனால் மிகவும் கஷ்டப்பட்டு அரண் அமைத்து, கிணறு வெட்டி, மருந்தும் உணவும் சேகரித்து வைத்துவிட்டு மோதலினால் அவற்றை விட்டு விலகிப் போவது மிகவும் சிரமமான விடயம். அதனால் காட்டில் கூடியவரை நாங்கள் வலுச்சண்டைக்குப் போவதில்லை. அதேசமயம் வரும் சண்டையை விடுவதும் இல்லை.”

எவ்வளவு கஷ்டங்கள்...... எவ்வளவு சோதனைகள்... இழப்புகள் எல்லாம் தாங்கி இன்று இவர்கள் எம் முன் சுதந்திரப் பிரியர்களாய் நிற்கின்றனர்... இருந்தாலும்... . இவர்கள் மனிதர்கள் பந்தமும், பாசமும், விருப்பும், வெறுப்பும் உள்ளவர்கள் .. ஆசைகள்... எதிர்பார்ப்புகள்... ஏக்கங்கள்.. இவையும் இவர்களிடம் இருக்கத்தான் செய்கின்றன.

‘‘எம் உயிரில் எமக்கு அக்கறையில்லை. போர் முனையில் உயிர் போவதைப் பெருமையாக நினைப்போம். ஆனால் வீணே எம் உயிர் விட்டுப்போவதில் எமக்கு இஷ்டமில்லை. எதிரிகளுடன் சண்டையிட்டு முன்னே போகவேண்டும்... அவர்களை அழித்து விட்டு முன்னே சென்று அவர்களின் ஆயுதங்களை அபகரிக்க வேண்டும். போர்த் தந்திரங்களைக் கையாண்டு எம்மைப் பாதுகாப்பதோடு எம் எதிரிகளுக்கு அதிரடி கொடுக்க வேண்டும்... இவைதான் எம் எண்ணங்கள்.....”

இவர்களின் பயிற்சிகள் மிகவும் சுவாரசியமானவை. இராணுவம் - போராளிகள் போன்று தம்மை மாற்றிக் கொண்டு பயிற்சி பெறுவார்கள். பின்னர் இராணுவத்திடம் போராளிகள் அடையும் சித்திரவதைகளை இவர்கள் தம்மிடையே மேற் கொள்ளுவார்களாம், இரவு நேரத்தில் தூங்கும் நிலையில் இவர்கள் எப்படித் தயார் நிலையில் இருக்கிறார்களா எனக் கண்டறியச் சோதனைகள் இடம் பெறும் தமக்குரிய பொருட்கள், மருந்து வகைகள், ஆயுதங்கள் உட்பட அனைத்தையும் இவர்கள் மணி அடித்தவுடன் ஒரு சிலநிமிடங்களுக்குள் எடுத்துப் போகின்றனரா என்று கண்டறிதல் முக்கியமான பயிற்சி.





‘‘எமக்கு எந்தக் கஷ்டமும், வருத்தமும் வரக் கூடாது எனக் கண்ணும் கருத்துமாக காவல் நின்று காப்பவர் எங்கள் மூத்த போராளிகள் மழையில் நனையவோ காலில் செருப்பில்லாது போகவோ அல்லது சிறிது நோய் என்றாலும் மருந்து எடுக்காமலோ இருக்க அவர்கள் எம்மை விடமாட்டார்கள் தவறினால் எமக்குந் தண்டனைதான் ... ஆனால் அது செல்லமான தண்டனை சிரிப்பூட்டும் தண்டனை! தண்ணீர்கூட சுட வைத்து ஆறியதையே குடிக்க வேண்டும்..... அத்தனை கவனிப்பு .....”

இருந்தாலும்; எதிரிகளால் அழிக்கப்பட்டவர்களும், உயிர் பறிக்கப்பட்டவர்களும் எழுதிச் சென்ற சரித்திரம் அந்தக் காட்டில் கல்லறை வடிவில் எழுதப்பட்டுள்ளது. இழந்துவிட்ட சக பெண் போராளிகளை எண்ணி இவர்கள் இன்னமும் கலங்குகின்றனர்.

‘‘சோதியா அக்காவின் இழப்பைத் தாங்க முடியவில்லை அவ எங்களுக்கு ஒரு தாய் மாதிரி .....”

‘‘எங்கட கண் முன்னால எங்களோட இருந்தவை செத்துப் போறதை எப்படித் தாங்க முடியும்.....?”

‘‘குண்டு வெடிப்பில சிதைந்து போய் ... இடிபாட்டுக்குள் நசிஞ்சுபோய்...துப்பாக்கிக்கு பலியாகி கோரமாய் எத்தனை எத்தனை எங்கட சிநேகிதிகளை இழந்திட்டம்......”

‘‘இந்த இழப்புக்கள் தான் எங்கட இலட்சியத்தின் ஊன்றுகோல்கள்......”

சொல்லிக்கொண்டு போகும் போதே வேதனைகள் விம்மல்களாக வெடிக்கின்றன.. இருந்தாலும் அந்த ஓர விழிகளில் எல்லாம் உறுதிகளின் உற்பத்திகள்.

‘‘காட்டு வாழ்க்கை வித்தியாசமான வாழ்க்கை! காட்டு வாழ்க்கை ஒரு சந்தோசமான வாழ்க்கை! எல்லோருக்கும் கிடைக்காத வாழ்க்கை ..காட்டு வாழ்க்கையும் ஒரு கல்லூரி வாழ்க்கைதான் காட்டு வாழ்க்கை வாழ கிடைத்தவர்கள் கொடுத்து வைத்தவர்கள் ... கிடைக்காதவர்கள் அதிர்ஷ்டம் செய்யாதவர்கள் ..காட்டு வாழ்க்கை வாழ்ந்த நாங்கள் அதற்காகப் பெருமைப்படுகின்றோம்......”

‘‘நாங்கள் சாதாரண பெண்கள்தான். எங்களைப் புரிந்து கொள்ளுங்கள் வித்தியாசமாக விழிகளை உயர்த்திப் பார்க்கும் ஆச்சரியப் பார்வைகளை தவிருங்கள் பயங்களையும், தயக்கங்களையும் தவிருங்கள்......எங்கள் மண்ணின்; தமிழ் இனத்தின் சுபீட்சத்திற்காக போராடும் எம்முடன் உங்களையும் இணையுங்கள்... எங்கள் பெண்களின் நல்வாழ்வுக்கு நாங்கள் பாடுபடுவோம் உங்கள் பங்களிப்பையும் தாருங்கள்... அவர்களின் விடுதலைக்கு குரல் கொடுப்போம் நீங்களும் வாருங்கள் ....”

தேசிய இன விடுதலையினூடேதான் சகல சமுகப் பிரச்சனைகளுக்கும் தீர்வு உண்டாகும். இதை இன்று நாம் உணர்ந்து விட்டோம் இந் நிலையில் எம் மண்ணின் விடுதலை எங்கள் பெண்களின் விடுதலை; இது தான் உண்மை!

‘‘எமக்கு எம் அமைப்பில் பூரண சுதந்திரமுண்டு எந்த நிலையிலும் எம்மால் தனித்து இயங்க முடியும். அதற்கான திறமையும், சுதந்திரமும் எமக்குண்டு. எமது அரசியல் அமைப்பிலும் இராணுவ அமைப்பிலும் எமது அயராத பங்களிப்புண்டு......”

விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்பின் பொறுப்பாளராக இருப்பது ஒரு பெண் போராளி. எமது அரசியல் அமைப்பில் பெண்களின் தலைமைத்துவப் பணிகளில் இதுவும் ஒரு உதாரணம்.

‘‘அன்போடும், பண்போடும் எம்மை ஆளாக்கியவர் எங்கள் தலைவர்... ”

‘‘எமக்கு எல்லாமே பெரிந்திருக்க வேண்டும். தெரி என்ற சொல்லை நாம் தெரிந்து வைத்திருக்கக் கூடாது...”

தொடரும்

## முரசொலிக்கு வந்த கடிதம்

### எழுத்துச்சீர்திருத்த போர்வையில் உயிர்மெய்எழுத்துக்கள் சிதைப்பு

ஆசிரியர்
முரசொலி

தமிழ் எழுத்துக்களின் சீர்திருத்தம் என்ற போர்வையில் பல தமிழ் உயிர்மெய் எழுத்துக்கள் திருத்தி அமைக்கப்பட்டு வருகின்றன. உதாரணமாக லை, லை, ரு, றா, ஞு, ணா, சில ஆண்டுகளுக்கு முன்னரேயே இந்தியாவில் தமிழ் எழுத்துக்கள் சீர்திருத்தப்பட்டு பல பத்திரிகைகள், சஞ்சிகைகள் வாயிலாக வெளியிடப்பட்டு வருகின்றன,

தொன்று தொட்டு வழங்கி வந்த உயிர்மெய் எழுத்துக்களான ஞு, ணு, ரு, லை, ளை, ணை, னை, னொ, றொ, ணொ, றோ, னோ, ணோ போன்ற எழுத்துக்களை எங்கே கொண்டு போய்ச் சேர்ப்பது? இதை யாரிடம் கேட்பது? எழுத்துக்களின் சீர்திருத்தம் வரவேற்கப்பட வேண்டியதொன்றா? அப்படியென்றால் உயிர் எழுத்துக்களான அ. அா, இ. இா, உ, உா. எ, எா, ஒ. ஓா என்று மாற்றியமைக்க முடியாதா?

காரைநகர் — செல்வி யோகேஸ்வரி சிதம்பரப்பிள்ளை

### புதிய கல்விப் பணிப்பாளரினால் இயலாதகாரியம் ஒன்றுண்டோ?

ஆசிரியர்
முரசொலி

யாழ். மாவட்டத்தில் மேலதிகமாக பயிலுநர்ஆசிரியர்கள் தெரிவு செய்யப்படமாட்டார்கள் என்ற செய்தியை 7ம் திகதி முரசொலி பத்திரிகை வாயிலாக அறிந்தோம்.

முதலாம் பட்டியலில் தெரிவாகி இரண்டாம் பட்டியலில் விடுபட்டோருக்கு மேலதிக இடங்களை புதிய கல்விப் பணிப்பாளர் ஒதுக்கித்தருவார் என்ற அசையாத நம்பிக்கையில் இருக்கிறோம். மன்னார் மாவட்டத்தில் சகலரின் நன்மதிப்பையும் (குறிப்பாக பயிலுநர் ஆசிரியர்களின்) பெற்ற கல்விப்பணிப்பாளரால் இயலாத காரியம் ஒன்று உண்டா?

மன்னார் மாவட்டத்தில் முதலாம் பட்டியலில் தெரிவான அனைவருக்கும் நியமனம் வழங்கப்பட்டது. மீளப் பரிசீலனை செய்தவர்களில் தகுதி உடையோருக்கு மேலதிகமாக வழங்கப்பட்டது. புதிய கல்விப் பணிப்பாளர் இது விடயத்தில் எமக்கு சாதகமான நடவடிக்கை எடுப்பார் என நம்பியிருக்கிறோம்.

கரவெட்டி — எஸ். ஜெயலட்சுமி

### புதிய தொலைபேசிக் கட்டணம் இம்மாதம் முதல் நடைமுறை

தொலைபேசிக் கட்டண புதிய நடைமுறை இம்மாதம் முதல் யாழ்ப்பாணத்திலும் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் இம்மாதம் முதல் சனி, ஞாயிறு உட்பட ஏனைய லீவுநாட்களிலும் தொலைபேசிக் கட்டணம் அரைவீதம் குறைக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் விசேட சுற்று நிருபம் ஒன்றின் மூலம் ஏற்கனவேநாடுபூராவும் அமுல் நடத்தப்பட்டு வந்த இந்த அரைக்கட்டண நடைமுறை யாழ்ப்பாணத்திலும் நடைமுறைக்கு வந்துள்ளது.

இதுவரை காலமும் யாழ்ப்பாணப் பிரதம தபாலகத்திலிருந்து கொழும்புக்கு தொலைபேசித் தொடர்பு கொள்வதற்கான கட்டணம் எல்லா நாட்களிலும் மூன்று நிமிடங்களுக்கு 26ரூபா30சதமாக அறவிடப்பட்டு வந்தது. இச்சுற்று நிருபத்தின் பிரகாரம் சனி ஞாயிற்றுக் கிழமைகளிலும் ஏனையவிடுமுறை நாட்களிலும், சகல நாட்களிலும் மாலை 6மணி முதல் மறுநாள்காலை 8மணிவரையான நேரங்களிலும் 14.20 சதமே அறவிடப்படவிருக்கிறது.

இதேவேளை ஞாயிற்றுக் கிழமை ஒருரூபாவால் இக்கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது. (33)

### இலங்கை வங்கி மானிப்பாய் கிளையில்
### பம்பாய் வெங்காயச் செய்கை குறைந்த வட்டியில் கடன்

அராலியில் பம்பாய் வெங்காயச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு குறைந்த வட்டியில் கடன் வழங்குவதற்கு இலங்கைவங்கி மானிப்பாய்க் கிளை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

அராலி பம்பாய் வெங்காய உற்பத்தியாளர் சங்கம் இலங்கை மானிப்பாய்க்கிளை முகாமையாளர் திரு சி.என்-நவரத்தினராசாவுடன் தொடர்பு கொண்டு மேற்கொண்ட முயற்சியினால் இக்கடனுதவி சங்கஉறுப்பினர்களான இப்பகுதி விவசாயிகளுக்கு விரைவில் கிடைக்கவுள்ளது.

ஒரு ஏக்கர் பம்பாய் வெங்காயச்செய்கைக்கு12ஆயிரத்து 500ரூபா என்ற அடிப்படையில் இக்கடனுதவி வழங்கப்படவுள்ளதாக இது பற்றிதெரிவிக்கப்படுகிறது. (13)

### உணவு முத்திரை

(புங்குடுதீவு)

புங்குடுதீவுப் பகுதிகளிலுள்ள கிராமசேவையாளர்களின் சில பிரிவுகளில் இவ்வாண்டிற்கான உணவு முத்திரைகள் விநியோகிக்கப்பட்டுவருகின்றன. (20)

ஐக்கிய நாடுகள் புனர்வாழ்வு உதவித்திட்டத்தின் கீழ்

## 583வீடமைப்பு வேலைகள்பூர்த்தி; அகதிகளுக்கு வழங்கப்படும்

ஐக்கிய நாடுகள் புனர்வாழ்வு உதவித்திட்டத்தின் கீழ் இதுவரை 583 வீடுகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன.

இந்தியாவில் இருந்து நாடு திரும்பியவர்களுக்கும், உள்ளூரில்இடம் பெயர்ந்தவர்களுக்குமாக மொத்தமாகக் கட்டப்பட்டு வந்த 1350 வீடுகளில் எஞ்சிய வீடுகள் வெகுவிரைவில் பூர்த்தியாக்கப்படவுள்ளதாக தேசியவீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

பூர்த்தியாக்கப் பட்டுள்ள 583 வீடுகள் பற்றிய விபரம் வருமாறு,

உடுவில் தொகுதியில்54குடும்பங்களுக்கும்,தெல்லிப்பழையில் 52 குடும்பங்களுக்கும், கோப்பாயில்52குடும்பங்களுக்கும்பருத்தித்துறையில் 143 குடும்பங்களுக்கும், கரவெட்டியில் 76 குடும்பங்களுக்கும், மருதங்கேணியில் 7குடும்பங்களுக்கும், நல்லூரில் 53 குடும்பங்களுக்கும், சாவகச்சேரியில் 47 குடும்பங்களுக்கும், வேலணையில் 14 குடும்பங்களுக்கும், யாழ்ப்பாணத்தில் 8 குடும்பங்களுக்கும், சண்டிலிப்பாய் 47 குடும்பங்களுக்கும் கைதடியில் 18 குடும்பங்களுக்கும்சங்காணையில்12குடும்பங்களுககுமாக மொத்தமாக583 குடும்பங்களுக்கு வீடுகள்கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளன.

### வேலணை கிழக்கில் பாராட்டு விழா

வேலணை கிழக்கைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியரும், சமுக சேவையாளருமாகிய திரு. ச. மாணிக்கவாசகரைப் பாராட்டு முகமாக வேலணை கிழக்கு மகா வித்தியாலய மண்டபத்தில்சேவை நலம் பாராட்டு விழா வொன்று வித்தியாலய அதிபர் திரு. சோ. வடிவேலு தலைமையில் நடைபெற்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தீவக அரசியற் பொறுப்பாளர் திரு. வி. கஸ்ரோ மங்கள விளக்கை ஏற்றி வைத்தார்.

மகா வித்தியாலய அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திரு. ஆ. கருணாகரன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

வேலணை பெருங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ. யோகேஸ்வரக்குருக்கள் இளைப்பாறிய ஆசிரியருக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

வேலணை கோட்டக்கல்வி அலுவலகப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. புலேந்திரன், கல்வி அதிகாரிகள் ஜனாப் எம். ஏ. ஆர். ஏ ரஹீம், திரு.க.சண்முகநாதன் திரு. சு. இரட்ணராசா, பண்டிதர் மா. மாணிக்கம், திரு. சி. இராசரத்தினம், ஜே.பி. பண்டிதர், அ. பொன்னுத்துரை திரு. த.குமாரசாமி, ஜே.பி. திருமதி தி பத்மாவதி ஆசிரியர் ந. ஜெகநாதன், திரு வ. ஐயாத்துரை உட்பட பலர் உரையாற்றினர்.

பதிலுரையைத் திரு மாணிக்கவாசகர் நிகழ்த்தினார். நன்றியுரையை திரு. பா. ஸ்ரீதரன் நிகழ்த்தினார். விழா இறுதியில் வில்லிசை நிகழ்ச்சியும் இடம் பெற்றது (24)

### விநாயகர் உற்சவம்

வவுனியா சிந்தாமணி விநாயகர் ஆலயத்தின் 5-ம் நாள் திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியாக கோண்டாவில் வெள்ளிவிழாக் கலைஞர்கள் வி. கே. கானமூர்த்தி, பஞ்சமூர்த்தி சகோதரர்களின் நாதஸ்வரக் கச்சேரியும், தவில் கச்சேரியும் இடம் பெற்றது.

இந் நிகழ்ச்சியை ரசிப்பதற்காக பெரும் திரளான மக்கள் கூடியிருந்தனர்.

நீண்டகாலஇடைவெளிக்குப் பின் இப்படியானதொரு நிகழ்ச்சி வவுனியாவில் நடைபெற்றதுகுறிப்பிடதக்கலாகும்.

வவுனியா இலங்கை வங்கி ஊழியர்கள் இதனை ஏற்பாடு செய்திருந்தனர். (11)

சாவகச்சேரிப் பிரிவு

### சுயதொழில் நிவாரணம் 12-ம் திகதி வழங்கப்படும்

(நாவற்குழி)

சாவகச்சேரி உதவியரசாங்க அதிபர் பிரிவில் உள்ள கீழ்க் கண்ட கிராம சேவையாளர் பிரிவில் வசிப்பவர்களுக்கு 12—ந் திகதி சனிக்கிழமை மீளக் குடியமர்வு நிவாரணமும், சுயதொழில் வேலை வாய்ப்பு நிவாரணமும் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள இலங்கை வங்கியில் வழங்கப்படவுள்ளது.

முன்பு எடுக்கத் தவறியவர்களும் இதைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும், இதுவே இறுதிச் சந்தர்ப்பம் எனவும் சாவகச்சேரி இலங்கை வங்கி முகாமையாளர் எம். வாமதேவா அறிவித்துள்ளார்.

நிவாரணம் வழங்கப்பட இருக்கும் கிராம சேவையாளர்கள் பிரிவுகள் வருமாறு:-

கைதடி, நுணாவில்,தனங்கிழப்பு, மட்டுவில் தெற்கு, இடைக்குறிச்சி எழுதுமட்டுவாள் தெற்கு, கொடிகாமம் சாவகச்சேரி கிழக்கு, நுணாவில், சரசாலை, கல்வயல், மீசாலை வடக்கு, அல்லாரை கச்சாய், கைதடி தெற்கு' எழுதுமட்டுவாள் வடக்கு, விடத்தற்பளை. (ப-5)

### சேவைக் கால பயிற்சி வகுப்பு

கிளிநொச்சி மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட பயிலுநர் ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சி வகுப்பு நாளை 12ந்திகதி சனிக்கிழமைமுதல் ஆரம்பமாக இருக்கின்றது.

பயிலுநர் ஆசிரியர்களுக்கான இவ்வகுப்புகள் தொடர்ந்து சனி ஞாயிற்றுக் கிழமைகளில் நடைபெறும். (ப.5)

## சுவையான செய்திகள்

### பாவம்! இதிலும் கூட தோல்வி

தற்கொலை செய்து கொள்வது சுலபமா? இந்தக் கேள்வியைப் பல முறை தற்கொலை செய்து கொள்ள பெரும்பாடு பட்ட பரஞ்சோதி என்பவரைக் கேட்பது நலம்.

இவருக்கு 37 வயது ஆகிறது. பள்ளி இறுதி வரை படித்த இவருக்கு வேலை கிடைக்கவில்லை. வாழ்க்கையில் வெறுப்பு ஏற்பட்டுத் தூக்கில் தொங்க முடிவு செய்தார். கயிறுடன் கீழே விழுந்த இவரது உயிர் போகவே இல்லை.

வித விதமான விஷங்கள், கண்ணாடித் தூள்கள் என்று சாப்பிட்டுப் பார்த்தார்... ஊஹூம். உயிர் போகவே இல்லை.

ரயிலில் விழ முடிவு செய்து தண்டவாளத்தில் படுத்தார். பாவம்.. அன்று ரயில் படு தாமதமாக வந்ததால் இந்த முயற்சியும் பலிக்கவேயில்லை. ரயிலை விட்டு விட்டு பஸ் முன்பு விழுந்து பார்த்தார் பரஞ்சோதி. டிரைவர் பிறேக் போட்டு நிறுத்தித் திட்டி விட்டுப் போய் விட்டார். பாவம் பரஞ்சோதி இதிலும் கூட அவருக்குத் தோல்வி தான். மனநிலை சரியாக இருக்கிறதா என்றறிய ஆஸ்பத்திரியில் பரஞ்சோதியைச் சேர்த்திருங்கிறார்கள்.

### நீயும் பொம்மை... நானும்...

பொம்மைகளுக்குத் தலைமுடி பலவித வண்ணங்களில் பூச்சுச் செய்யப்பட்டு விற்கப்படுவதைப் பார்த்திருக்கின்றோம். இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளில் நாகரிக விருப்பம் நிறைந்தவர்கள் உள்ள இடங்களுக்குப் போனால் பெண்களில் பலர் தங்கள் முடிகளுக்கு நீலம், சிவப்பு, மஞ்சள் என்று விதவிதமாக வண்ணச் சாயத்தைப் பூசிக் கொண்டு திரிவதைப் பார்க்க முடியும். இங்கே நம்மவர்கள் முடி கிருதா, மீசை, புருவம் இவற்றிற்குக் கறுப்பு 'டை' அடிக்கவே தயங்குவார்கள். மேல் நாட்டில் முடிக்கு 'டை' அடிப்பது சர்வ சாதாரணம்.

### புகைத்து... புகைத்து...

ஆபிரிக்காவிலுள்ள நேட்டாலைச் சேர்ந்த பண்டிட்ரிமானந்து மஹராய் புகைத்துக் கொண்டே தூங்கிப் போய் இறுதியில் புகைந்து போயிருக்கிறார். படுக்கையிலும் புகைப் பழக்கம் தொடர்ந்தும் துரத்துமானால் சாம்பலாக வேண்டியது தான்.

# ஒழுக்கமும், கட்டுப்பாடும் உள்ளவர் விடுதலைப் புலிகள்

## தி.க.செயலர் வீரமணி சொல்கிறார்

''புலிகள் ஒழுக்கக் கட்டுப்பாடுடையவர்கள். மற்றவர்களின் விவகாரத்தில் அவர்கள் தலையிடுவதில்லை.' என்று திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் திரு. கி. வீரமணி கூறியுள்ளார்.

பத்திரிகையாளர் மாநாடொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு சொன்னார்.

அவர் மேலும் கூறியதாவது: 'தமிழகத்தில் திராவிடர் கழகத் தொண்டர்களுக்குத் தமிழீழ விடுதலைப்புலிகள் ஆயுதப்பயிற்சியளிப்பதாக வெளியான செய்திகளும், குற்றச்சாட்டுகளும் விசமத்தனமானவை. ஆதரமற்றவை, தவறானவை.

பத்திரிகைகள் சிலவற்றில் வெளியான செய்திகளும், சில அரசியல் கட்சிகளினால் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளும் மத்திய புலனாய்வு நிறுவனங்களினால் குறிப்பாக 'றோ' வினால் திட்டமிட்டு உருவாக்கப்பட்டவை ஆகும். தமிழக மாநில அரசுக்கும், முதலமைச்சர் மு. கருணாநிதிக்கும் அசௌகரியத்தை உருவாககும் நோக்கிலானவை.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு தமிழ்நாடு மாநிலத்தில் எந்தவிதமான பயிற்சி முகாம்களும், வசதிகளும் கிடையாது என திட்டவட்டமாகக் கூறுகிறேன்.

புலிகளையும் திராவிடர் கழகத்தையும் அறிந்த மக்கள் இத்தகைய குற்றச்சாட்டுகளுக்கு செவிமடுக்க மாட்டார்கள். புலிகள் ஒழுக்கக்கட்டுப்பாடுடையவர்கள் மற்றவர்களின் விவகாரத்தில் அவர்கள் தலையிடுவதில்லை. நாமும் எதையும் இரகசியமாகச் செய்யாத பகிரங்கமான இயக்கத்தினர்,

மத்தியில் அரசாங்கம் மாறிவிட்ட போதிலும் முன்னைய புலனாய்வு முறையே தொடர்ந்து இருந்து வருவதும் அந்த அமைப்பு மீது புதிய அரசாங்கம் ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டைக் கொண்டிராததும் கவலைக்குரியதாகும்.'

## ஓட்டப்போட்டி

விளையாட்டு அமைச்சினால் நடாத்தப் பட்டு வரும் தேசிய விளையாட்டுவிழாவை முன்னிட்டு சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நடாத்தப்பட்ட ஆண்களுக்கான 96 கிலோ மீற்றர் ஓட்டப் போட்டியில் மந்துவிலைச் சேர்ந்த ஐ. வினாயகமூர்த்தி முதலாம் இடத்தையும், மட்டுவிலைச் சோந்த ஐ. சோமசுந்தரம் இரண்டாம் இடத்தையும், திரு. வி. இராஜேந்திரம் 3ம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

பெண்களுக்கான 20 கிலோ மீற்றர் ஒட்டப் போட்டியில் செல்வி. ஞானகௌரிமுதலாம் இடத்தையும், செல்வி. என். இராஜமலர் 2ம் இடத்தையும், செல்வி. ஜெயசுதா 3ம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

இப்போட்டியைச் சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவு விளையாட்டு உத்தியோகத்தர் செல்வி. என். யசோதா ஆரம்பித்து வைத்தார். (ப. 5)

## கூத்து நம்நாட்டுப் பாரம்பரியக் கலைகளில் குறிப்பிடத்தக்கது

இலங்கையில் யேசு மதத்தைப் பரப்பி வந்த பிரான்சிஸகன், யேசு என்ற இரு சபையைச் சேர்ந்த மதகுருமார்கள் இரண்டு வெவ்வேறு புவியியல் பிரதேசங்களில் இருந்தே புலம் பெயர்ந்து தமதுமதத்தை ஈழத்தில்பதித்தனர். அவர்கள் தமது மதத்தை அறிமுகம் செய்ய எமது நாட்டில் பாரம்பரியக் கலைகளில் ஒன்றாகிய நாட்டுக் கூத்தை ஒரு ஊடகமாகப் பயன்படுத்தினார்கள்,

இவ்வாறு கவிஞர் தேவதாசனால் பாடப்பட்ட' வித்துக்கள், தென்மோடி நாட்டுக் கூத்து நூல் வெளியீட்டு விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் அருட் திரு. எஸ. கில்லறி ஜெபனேசன் எம். ஏ. குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது.

''மதம் பரப்ப வந்த குருமார்கள் வட இந்தியாவிலும், தென் இந்தியாவிலும்நிகழ்ந்த அடியார்கள் வரலாற்றை நாட்டுக் கூத்தாக்கி மதம் பரப்பமுற்பட்டனர்.

வடநாட்டு அடியார்கள் வடமோடி என்றும், தென் நாட்டு அடியார்கள் வரலாறு தென்மோடி என்றும் அறிமுகப்படுத்தினர்.'

திரு, தி லோகநாதன் இவ் வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராகக்கலந்துகொண்டார்,

யாழ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விரிவுரையாளர்கள் கலாநிதி இ, பாலசுந்தரம் திரு, எஸ், எஸ தங்கராசா ஆகியோர் ஆய்வரங்கில் பங்கு கொண்டனர்,

திருமறைக்கலாமன்றப் பொதுச் செயலாளர் திரு. எஸ, கொன்ஸரன்ரைன்நன்றியுரை கூறினார் (36)

## நம்மைச் சுற்றி நடப்பவை

நேற்றுக்காலை... எமது ஆசிரிய பகுதி அலுவலக சுவர்க்கடிகாரம் 9 மணியை நெருங்கிக் கொண்டிருக்கிறது.

யாழ்.இ.போ.ச.சாலை முகாமையாளர் திரு.எஸ். மணிவாசகரும் மற்றொரு பொறுப்பான அதிகாரியும் உள்ளே நுழைகின்றனர்.

நேற்றைய முரசொலியில் 794 இலக்க பஸ்சேவை அடிக்கடி மக்கர் காசைக் கொடுத்து கஷ்டப்படுவது மக்கள்! என்ற ஸ்பெஷல் றிப்போர்ட் தொடர்பாக தமது நிலைப்பாட்டை விளக்கவே அவர்கள் வந்திருந்தனர்.

பல சிரமங்களின் மத்தியிலும் எமது பிரயாணிகளுக்கு நல்ல சேவை வழங்க வேண்டும் என்பதேஎமதுமானக்சீக விருப்பம் என்று சொன்ன திரு.மணிவாசகர்,பாடசாலை இருநேரங்களாக மாற்றப்பட்தனால் 794ம் இலக்க மாலை நேர பஸ்சேவை சில தடவைகளில் பாதிக்கப் பட்ட தென்றும் இன்று முதல் மாலை 5 மணிக்கு கனகன்புளியடி சேவை ஒழுங்காக நடைபெறத் தான் உடனடி நடவடிக்கை எடுத்துள்ளதாகவும்,இப் பாதைப்பயணிகளின் பயண இடர்களை .நேரில் அறிய தான் இன்று காலை கொடிகாமத்திலிருந்து புறப் படும் பஸ்ஸில் பயணம் செய்து செம்மணி ஊடாக பயணத்தில் எதிர் நோக்கப் படும் சிரமங்களையும் அவதானித்து வேண்டிய மாற்று நடவடிக்கைகளை எடுப்பதாகவும் தெரிவித்தார்.

பிரயாணிகளின் பத்திரிகைகளின் கருத்துக்கு மதிப்பளிக்கும் திரு.மணிவாசகர் போன்ற அதிகாரிகள் எம் மத்தியில் இன்னும் இருப்பது பெருமையும்,பெருமகிழ்ச்சியும் அளிக்கிறது.

சபாஷ்—மணிவாசகர்

கிறிசன்

## தச்சுத் தொழிற்துறையை அபிவிருத்தி செய்ய முயற்சி

தச்சுத். தொழிற் துறையை விருத்தி செய்யும் முகமாக யாழ். மாவட்டத் தச்சுத் தொழிற்சாலை உரிமையாளர் சங்கம் உருவாக்கப் படவுள்ளது.

இச்சங்க அங்குரார்ப் பணக் கூட்டத்தில் தச்சுத் தொழிற் சாலைகள் எதிர் நோக்கும் தொழில் ரீதியான நெருக்கடிகள் பற்றி ஆராயப்பட்டது.

இச் சங்கத்தின் தலைவராக திகு. மு. ஜெகதீசன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சங்க நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தும் முகமாகப் புதியஅங்கத்தவர்களை அங்கீகரிப்பதென்று தீர்மாணிக்கப் பக்டது.

அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் 190, அபூபக்கர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப் பட்டுள்ளது. (36)

## பிரான்ஸில் விடுதலைப் புலிகள் மே தினம்

பிரான்ஸில் மே தினத்தை விடுதலைப் புலிகளின் பிரான்ஸ் கிளை கொண்டாடியது.

சி. ஜி. ரி என்ற தொழிலாளர் அமைப்புடன் இணைந்து இக் கிளை மே தினத்தைச் சிறப்புறக் கொண்டாடியது.

## கொழும்பு செல்வா

(மூளாய்)

கடந்த 6-ம் திகதி நல்லூர் இந்து தமிழ் கலவன் பாடசாலையில் வசதிக் கட்டண, தொண்டர் ஆசிரியர்களின் நலன்களைப்பற்றி ஆராய எஸ். வி, விக்கிரமசிங்கம் தலைமையில் கூட்டமொன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சகல தொண்டர் ஆசிரியர்களையும் நிரந்தரமாக்குவது சம்பந்தமான சகல விடயங்களும் ஆராயப்பட்டு, 10 ம் திகதி கொழும்பு சென்று வெள்ளை அறிக்கையொன்றைச் சமர்ப்பிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது. (ப 4)


## 31ஆம் நாள் அஞ்சலி

மலர்வு 12 — 05 — 1954



உதிர்வு 11 — 04 — 1990

செல்வி

சிதம்பரநாதர் மகேஸ்வரிதேவி

பாசத்தின் நிழலாய் நின் திருமுகம்
இன்றும் பார்வை பாதிப்பாய் பா்ணமிக்க
ஓடி யோடி யாரைத் தேடினும்
அங்கெல்லாம் உன்முகம் என்றும் உன் முகம்
எழிற்கோலம் காட்டி நிற்கும் மகேஸ்வரியே
நின் ஆத்மா சாந்தி அடைய இறைஞ்சுகிறோம்

அன்னாரின் ஈமக்கிரியைகளில் கலந்துகொண்டும் அனுதாபச் செய்திகள் அனுப்பியும், மற்றும் பல்வேறு உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் யாபேருக்கும் நன்றியறிதலை தெரிவித்துக்கொள் கிறோம்.

பிரிவுத்துயரால் வாடும்

சகோதரர்கள், சகோதரிகள்,
மச்சான்மார்கள், மச்சாள்மார்கள்

சென்மேரிஸ் லேன்,
தும்பளை,
பருத்தித்துறை.

05021



## சிறுவிளம்பரம்

### புத்தகம்

ஆங்கில மொழி படிப்பவருக்கு மிக அவசிய தேவையான நூல் ''வரதர் மாணவர் அகராதி'' 18400 சொற்கள் 600 பக்கம் மிகச்சிறந்த ஆங்கில — தமிழ் அகராதி இதுவே. அறிமுக விலை ரூபா 95/- மட்டும். எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். 05077

### புத்தகம்

புதிய உயர்தர விலங்கியல் பகுதி II கரப்பான் தேரை விளக்கப் படங்களுடன் உள்ளடக்கிய அரிய நூல். ஆசிரியர் K. சங்கர்ஐயர் B. Sc வெளியீடு, விற்பனை பூபாலசிங்கம் புத்தக சாலை யாழ்ப்பாணம். 05033



## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 20 — 06 — 1967



மறைவு 11 — 04 — 1990

செல்வன் நற்குணம் நாகமுத்து

(ஆசிரியர் சாரணர், ஓவியக் கலைஞர்)

ஆசிரியராக, சாரணராக, ஓவியராக
நீ திகழ்ந்தாய்; அதனை நிலை நிறுத்தி
புகழ்பரப்ப முன்பே எங்கோ பறந்துவிட்டாய்,
உன் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்

ஆசை, மிக்கேல், ஞானப்பிரகாசமும் பிள்ளைகளும்,
செலஸ்தீன், றோஸ் றீற்றாவும் பிள்ளைகளும்

புலோப்பளை கிழக்கு,
பளை

05085

# யாழ். குடாநாட்டு நீர் உவர் நீராகும் அபாயம்

யாழ்குடா நாட்டின் தரையின் கீழ் உள்ள நன்னீரினது மட்டம் விரைவாக குறைந்து வருவதாக ஆய்வுகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இதன் காரணத்தால் குடா நாட்டில் உள்ள பல கிணறுகள் கோடை காலத்தில் வற்றுவதோடு, நன்னீர் கொஞ்சம், கொஞ்சமாக உவர் நீராகவும் மாறிவருகின்றது.

தற்போது குடாநாட்டில் ஒருலட்சத்திற்கு மேற்பட்ட கிணறுகள் மூலம் தரையின் கீழ் உள்ள நன்னீர் வெளியேற்றப்படுகின்றது, இதன் அதிகரிப்பினாலே கடல்நீர் உள் நாடு நோக்கி ஊடுருவி வருகின்றது. நீர் உவர்த்தன்மையடைவதற்கும் இதுவே காரணமாகும்.

எதிர் காலங்களில் நன்னீரை இறக்குமதி செய்ய வேண்டிய நிலை யாழ்குடா நாட்டிற்கு ஏற்படுமெனவும் அச்சம் தெரிவிக்கப்படுகிறது. (03)

## ஒரு ரூபா 25 சதத்திற்கு பாண் சீனிச்சம்பலுடன் கிடைக்கும

சீனிச் சம்பலுடன் 100 கிறாம் பாண் 1 ரூபா 25 சதத்திற்கு கொழும்பில் அடுத்த வாரம் முதல் கிடைக்கும்,

சந்தைப்படுத்தும் திணைக்களம் இப்பாணைத் தயாரித்து விற்பனைக்கு விடும் என உணவு கூட்டுறவு அமைச்சர் திரு. வீரசிங்க மல்லிமாராச்சி பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்,

இப்பாணைத்தயாரிப்பதற்கு 1 ரூபா 8 சதம் செலவாகிறது. விற்பனைமூலம் 17சதம் இலாபம் கிடைக்கிறது என்றும் அமைச்சர் விபரித்தார்,

## கிணற்றில் மீட்கப்பட்ட யானை புலிகளின் பராமரிப்பில்

கிணற்றிலிருந்து மீட்கப்பட்ட யானை ஓமந்தை விடுதலைப் புலிகளின் முகாமில் உள்ளது.

நாவற்குளம் காட்டு பாழடைந்த கிணற்றினுள் தவறி வீழ்ந்த யானையினை அவ்வூர் மக்களின் உதவியுடன் விடுதலைப் புலிகள் மீட்டு, வந்துள்ளனர்.

தமது முகாமில் வைத்து விடுதலைப் புலிகள் யானையினை நன்கு பராமரித்து வருகின்றனர். இத்தகவலை புலிகள் செயலக வட்டாரம் தெரிவித்தது.(11)

## கடந்த வார புயல் சூறாவளியில் ஆந்திராவில் 52 பேர் பலி

ஆந்திராவில் வீசிய புயலினால் இறந்தோர் தொகை ஐம்பத்து இரண்டாக உயர்ந்துள்ளது.

இரண்டாயிரம் கிராமங்கள் புயலினால்தாக்குண்டன. இக்கிராமங்களைச் சேர்ந்த பத்து இலட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இக்கிராம மக்களுக்கு விமானங்களில் இருந்து உணவுப் பொட்டலங்கள் போடப்படுகின்றன.

இதற்கிடையில் தமிழ்நாடு ஆந்திர மாநிலங்களில் ஏற்பட்ட புயல் சேதங்களைப் பார்வையிட பிரதமர் திரு. வி. பி. சிங் அங்கு இன்று விரைகிறார்

ஆந்திராவில் ஏற்பட்டபுயல் மழை சேதங்கள் தொடர்பான நிவாரணத்துக்கு முதலமைச்சர் உதவி நிதியிலிருந்து 25 லட்சம் ரூபா தமிழ் நாடு அரசால் உதவி வழங்கப்படும் என்று முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி நேற்று சட்டசபையில் அறிவித்தார்.

## வவுனியாவில் இம்முறை வெசாக் அலங்காரப் பந்தல்

வெசாக் அலங்காரப் பந்தல்கள் இம்முறை வவுனியாவில் அமைக்கப்பட்டிருந்தன.

வவுனியா இராணுவ முகாமிலும், பொலிஸ் நிலையத்திலும் வெசாக் கூடுகள் காணப்பட்டன.

கண்டி வீதி பௌத்த விகாரையில் சமய நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. கணிசமான அளவு பௌத்த மதத்தினர் கலந்து கொண்டனர்.

விகாரை பிரதம பிக்கு சமய நிகழ்ச்சிகளை நடத்தி வைத்தார்.

தமிழ் மக்களும் நிகழ்ச்சிகளை கண்டுகளிக்க அழைக்கப்பட்டிருந்தனர்.

## கம்பி, வாள், கத்தியால் தாக்கி இளைஞர் பலி

புன்னாலைக் கட்டுவனைச் சேர்ந்த செல்லர் ஞானச்செல்வம் (22) என்பவர் கம்பி வாள், கத்தி சகிதம் தாங்கிய கோஷ்டி ஒன்றினால் பலவந்தமாக தாக்கப்பட்டு மரணமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் சிலர் அவரை வழிமறித்து இழுத்துச் சென்று அச்செழு சுடலை வீதியில் வைத்து கத்தி, வாள் கம்பிகள் சகிதம் பலவந்தம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து,

இதனை அறிந்த உறவினர்கள் அவ்விடத்திற்குச் சென்று அவரை மீட்டு அன்றிரவு 10-20 மணியளவில் யாழ். ஆஸபத்திரியில் அனுமதிக்கப்பட்டு பின் நேற்று அதிகாலை உயிரிழந்மிள்ளார் இவரது உடல் முழுவதும் காயங்களாகவே காணப்பட்டன, (94)

## முல்லை நிதி ஒதுக்கீட்டில் விவசாயத்துக்கு முதலிடம்

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு இவ்வருடத்திற்கு ஒதுக்கப்பட்ட பணத்தில் விவசாயத் துக்கே கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்துக்கு வழங்கப்பட்ட இந்நிதியில் மீன் பிடித்துறைக்கு 17 இலட்சத்து 95 ஆயிரம் ரூபாவும், விவசாயத்துக்கு 60 இலட்சத்து 36 ஆயிரம் ரூபாவும், கால் நடை வளர்ப்பு பராமரிப்புக்கு 20 இலட்சத்து 12 ஆயிரம் ரூபாவும், கூட்டுறவு அபிவிருத்திக்கு 20 இலட்சத்து 98 ஆயிரமும் ஒதுக்கப்பட்டுள்ளது. (38)

## பாஷையூரில் சற்குணநந்தன் தென்மோடி நாட்டுக் கூத்து

பாஷையூர் மகேந்திரபுரத்திடவில் இன்று வெள்ளிக்கிழமை இரவு 8 மணிக்கு பதுவையர் கலாமன்றத்தினால் 'சற்குணானந்தன்' தென்மோடி நாட்டுக்கூத்து இடம் பெற உள்ளது.

இந் நாடகம் சொற்சுவைப் புலவர் என்றிப்பிள்ளை சூசைப்பிள்ளையால் எழுதப்பட்டது, அண்ணாவியார் P. S. சின்னத்துரை இந் நாடகத்தை நெறியாள்கை செய்துள்ளார்.

20 வருடங்களின் பின் இன்றுதான் இந் நாடகம் மேடையேற்றப் படுகின்றது. பாஷையூர் பங்குத் தந்தை வணபிதா பிரான்சிஸ் அடிகளார் இந்நாடகத்தை ஆரம்பித்துவைப்பார். (52)

## நிதி உதவி

முல்லைத்தீவுகடற்தொழில் விரிவாக்க உத்தியோகத்தரின் செயலகத்தை புனரமைக்கவும் கொக்குளாயில் புதிய கடற்தொழில் விரிவாக்கசெயலகம் கட்டுவதற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கி முறையே ஒரு லட்சத்து 50ஆயிரம் ரூபாவும் 5லட்சம் ரூபாவும் வழங்கியது.

## மெதடிஸ்த மகளிர் கல்லூரியை தரமுயர்த்துமாறு கோரிக்கை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரியை 'அபிவிருத்திக் கல்லூரி' யாகத் தரமுயர்த்துமாறு கல்லூரி அபிவிருத்திச் சபை கல்வி,உயர்கல்வி அமைச்சர் திரு.லலித் அத்துலத் முதலியை மகஜர் மூலம் கேட்டுள்ளது.

கல்லூரி அபிவிருத்திச் சபையால் அமைச்சருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள மகஜரில் கல்லூரியின் சாதனைகள் பற்றி விளக்கமாகத் தெரிவிக்கப்பட்டதோடு கல்லூரியைத் தரமுயர்த்துவதற்கான காரணங்களையும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.(15

## தேனிசை செல்லப்பாவின் இசைநிகழ்ச்சி யோகபுரத்தில்

தேனிசை செல்லப்பாவின் எழுச்சிப்பாடல் இசைநிகழ்ச்சி எதிர் வரும் 14ம்திகதி யோகபுரத்தில் இடம் பெறவுள்ளது,

விடுதலைப் புலிகள் கலைகாலசர பிரிவின் ஆதரவில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்ச்சி மல்லாவி மாகவித்தியாலைய மண்டபத்தில் இடம்பெறும்(ப,8).

## வவுனியா மாவட்டத்தில் நன்னீர் மீன் வளர்ப்புக்கடன்

வவுனியா மாவட்டத்தில் இலங்கை வங்கிக் கிளையினரால் நன்னீர் மீன் பிடித் தொழிலுக்கு கடன்கள் வழங்கப்பட்டன.

இலங்கை வங்கியின் பிராந்திய முகாமையாளர் திரு என் சிவன் இதற்குரிய காசோலைகளை வவுனியா கிளையில் வைத்து வைபவ ரீதியாக கையளித்தார்,(11)

## சட்டவிரோத மின்சாரம் தாக்கி பெண் மயக்க நிலையில்

விறகு எடுக்கச் சென்ற குடும்பப் பெண் ஒருத்தி பக்கத்து வீட்டாரின் சுட்டவிரோத மின் தாக்கி மயங்கிய நிலையில் தனியார் மருத்துவமனையொன்றில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

புங்குடுதீவு 7-ம் வட்டாரத்திலுள்ள யெ. புவனேஸ்வரி (வயது 35) என்பவரே இவ்வாறு பலத்த தாக்குதலுக்குள்ளாக்கப்பட்டார்.

பக்கத்து வீட்டில் நடைபெற்ற பிறந்த நாள் நிகழ்ச்சியொன்றுக்கு தொலைக் காட்சிப் பெட்டி உபயோகிப்பதற்காக போடப்பட்டிருந்த மின் கம்பியில் சிக்குண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் நேற்று முன் தினம் நிகழ்ந்துள்ளது (20)

### வி. புலிகள்...

கள் முன்னணி தலைமைச் செயலகம் தருமபுரம் கிளிநொச்சி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி வி. புமக்கள் முன்னணியினர் கேட்டுள்ளனர்.

தமிழீழ இணக்கமன்று என்றநூலைபெறவிரும்புபவர்கள் அப்பகுதி இணக்க மன்ற செயலாளரிடம்ஐந்துரூபாவை செலுத்தி பெற்றுக் கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## சட்டவிரோத மின்பாவனையை தடுக்க விசேட தடுப்புக் குழு

யாழ்மாநகரசபை பகுதியில் மேற் கொள்ளப்பட்டு வரும் சட்ட விரோத மின்பாவனையை கட்டுப்படுத்த விசேட தடுப்புக்குழு ஒன்று அமைக்கப்படவுள்ளது

சட்டவிரோத மின்பாவனையால் மாதாந்தம் யாழ்மாநகரசபை ஐந்துலட்சம்ரூபாவை இழந்து வருவதாக தெரியவருகின்றது.

இந்தக் குழுவினர் சட்டவிரோத மின் பாவனையில் ஈடுபடுவோரை கண்டு பிடித்து அபராதம் விதிக்கும் நடவடிக்கையில் விரைவில் இறங்கவுள்ளனர். (08)

### எயிடஸ்...

மனித உடலின் கலங்களில் எயிட்ஸ் பரவுவதைத் தடுக்கக் கூடிய இந்த இரசாயனத்துக்கு இன்னமும் பெயரிடப்படவில்லை.

பால்டிமோர், பொஸ்டன், ஹெய்டி ஆகிய இடங்களைச் சேர்ந்த 33 பெண்களின் முலைப்பால் இந்த ஆய்வில் பயன்படுத்தப் பட்டது. இப் பெண்களில் சிலருக்கு எயிட்ஸ் நோய் தொற்றியுள்ளது, சிலருக்குத் தொற்றவில்லை.

மனித முலைப்பாலில் காணப்பட்டஇதேஇரசாயனம் மனித இரத்தத்திலும், பசுப் பாலிலும் இருக்கிறதா என அறிய மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை வெற்றியளிக்கவில்லை என ஆராய்ச்சியை மேற்கொண்ட நிபுணர்கள் தெரிவித்தனர்.

### நாடு...

வுள்ளது.

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் இம்மாதம் 13-ம் திகதி நடைபெறவுள்ள இவ் விழாவிற்கு பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். கதிரவேற்பிள்ளை தலைமை தாங்குவார். யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் ஏ. துரைராஜா விழாவிலே பிரதம விருந்தினராகக் கலந்துகொள்கிறார். (15)

### வடபகுதி...

மா அதிபர் ஏ.எஸ்.செனிவரத்ன இது பற்றி தெரிவிக்கையில்,''இது ஒரு வழமையான பாதுகாப்பு நடவடிக்கை.சந்தேகத்தின் பேரில் விசாரிக்கப்பட்டு வரும் இளைஞர்கள் விசாரணைகளின் போது அப்பாவிகள் எனக் காணப்பட்டால் விடுவிக்கப் படுவர்'' என்றார்.

சாம். தம்பிமுத்துவின் கொலை தொடர்பாக விசாரணைகளை குற்றப்புலனாய்வுப் பணியக சிரேஷ்ட பொலிஸ் அதிபர் காமினி பெரேரா தலைமையில் பொலிஸ் அதிபர் லயனல் குணதிலகவும், கறுவாக்காட்டுப் பொலிஸரும் மேற் கொண்டு வருகின்றனர்.

இக்கொலையின் பின்னணி தொடர்பாக நுணுக்கமான விசாரணை நடைபெறுகிறது.

## ராட்சத புகைக்கூடு ஏவுவது கடைசி நேரத்தில் நிறுத்தம்

வல்வை முத்துமாரி அம்மன் கோவில் இறுதி உற்சவ தினமான கடந்த புதன்கிழமை வானில் ஏவப்படவிருந்த ராட்சத புகைக்கூடு கடும் காற்று வீசியதை அடுத்து பிறிதொரு தினத்திற்கு ஏவுவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

வங்காள விரிகுடாவில் ஏற்பட்ட தாழமுக்கம் காரணமாக ஏற்பட்ட பலத்த காற்றினாலேயே புகைக்கூடு ஏவுவது அன்றைய தினம் கைவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

சித்தார இசை கோஷ்டியின் இசை நிகழ்ச்சியும் நடைபெற்றது. (22)

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ்,[பிரைவேட்]லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாண ஸ்ரான்லி வீதி 62ல இலக்கத்திலுள்ள அச்சகப் பிரிவில் 11-05-1990ல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது